

ராஜ பீடி கம்பெனி, கொம்ழுபு-14.


Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (19-7-66) இதழ் 159

பராபவ ஆடி 3 ரபி அவ் 29 செவ்வாய்க்கிழமை




ராஜ பீடி கம்பெனி கொழும்பு-14


# உயர் கல்விக்கு தேசிய சபை

## மந்திரிக்கு விரிவான அதிகாரங்கள்

### புதிய கல்விமசோதா மக்கள்சபையில் தாக்கல்

கொழும்பு, திங்கள்

இன்று கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மசோதாவில் உயர் கல்விக்கென ஒரு தேசியசபை அமைப்பதற்கும் கல்வி அமைச்சருக்கு விரிவான அதிகாரங்கள் வழங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. முன்னர் தயாரிக்கப்பட்டிருந்த மசோதாவில் கல்வி மந்திரிக்கு வழங்கப்பட்டிருந்த 'விசேஷ உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரங்கள்' இந்த மசோதாவில் பொது உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரங்கள்'என மாற்றப்பட்டுள்ளது.

உயர்கல்வி மசோதா இன்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில், கல்வி அமைச்சர் திரு. ஐ எம். ஆர். ஏ, இரியகொல்லையினால் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த மசோதாவின்படி நாட்டின் உயர்கல்வி சம்பந்தமாக கல்வி அமைச்சருக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்படவிருக்கின்றன. உயர் கல்விக்கென தேசிய சபை ஒன்றைநிறுவுவதற்கும் இந்த மசோதாவகை செய்கிறது பதின்மூன்று அங்கத்தவர்களைக்கொண்டதாக இருக்கும் இந்த தேசிய சபையின் தலைவர் உட்பட அங்கத்தவர் அனைவரும் கல்வி அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

உயர்கல்விக்கென தேசிய சபையொன்று நிறுவப்படுவதன்மூலம் இதுவரைசர்வகலாசாலைகளுக்கு இருந்துவந்த சுயாதீனம்இனிஇருக்கமாட்டாது மூன்று சர்வகலாசாலைகளின் கல்வி, நிர்வாகம், நிதி ஆகியவை சம்பந்தப்பட்ட முழுக்கட்டுப்பாடும் தேசிய சபையிடமே இருக்கும். சர்வகலாசாலைகளின் உப அத்தியட்சகர்களின் நியமனத்துக்கு, உயர் கல்விக்கான தேசிய சபை தெரிவிக்கும், குறைந்தது மூவரின் பெயர்களிலிருந்து கல்விஅமைச்சர் இனிதெரிவு செய்து நியமிப்பார். இன்று

(8-ம் பக்கம் பார்க்க)

# 'இன மத துவேஷத்தை கிளறிவிடாதீர்'

## எதிர்க்கட்சியின் போக்கிற்கு செனட்டர் மாணிக்கம் சாட்டை

கொழும்பு, திங்கள்

நாட்டில் இன மதக் கலவரங்களை ஏற்படுத்த வேண்டாமென்று இன்று செனட் சபையில் செனட்டர் எம். மாணிக்கம் எதிர்க் கட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு எதிர்க் கட்சியினர் சமர்ப்பித்துள் திருத்தப் பிரேரணைக்கு அரசாங்கத் தரப்பில் பதிலளித்து செனட்டர் மாணிக்கம் பேசினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

சிங்களத்தை பலவந்தமாகத் தமிழ் மக்களைப் படிக்க செய்ய முயன்றீர்களானால் அதனால் உங்கள் எண்ணம் நிறைவேறாது. பண்டாரநாயகா அரசாங்கத்தின் கொள்கை தமிழர் சிங்களம் படிப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. சிங்களத்தை தமிழர் படிக்க வேண்டுமானால் அதனை அவர்களின் நல்லெண்ணத்துக்கு விட்டுவிட வேண்டும். எதிர்க் கட்சியினர் இப்போது சிங்கள - பௌத்த கோஷத்தைக் கிளப்பவும் வடக்கு கிழக்கில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தவும் முற்

(8-ம் பக்கம் பார்க்க)

# யார் பராமரிப்பது?

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணம் வீதிகளில் பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருந்துவரும் கட்டாக்காலி ஆடு, மாடுகளை மாநகரசபை ஊழியர்கள் பிடித்துச் சென்று ஒரு இடத்தில் கட்டி வைக்கின்றனரல்லவா?

இப்படி கட்டப்பட்ட ஆடுகளில் ஒன்று குட்டி ஈன்றுவிட்டதாம்! இப்படி இவை அங்கேயே குட்டிகள் ஈன்றுகொண்டிருந்தால் அவற்றைப் பராமரிப்பது யார் என்ற கேள்வி இப்பொழுது மாநகரசபை ஊழியர் மத்தியில் எழுந்துள்ளதாம்!

<u>பிரதிநிதிகள்சபை</u> -

# மக்கள் கைக்கு அதிக பொறுப்புகள் கிடைக்கும்

## மாவட்டசபைகள்பற்றி டாக்டர் நாகநாதன் மகிழ்ச்சி

கொழும்பு, திங்கள்

''பிரதிநிதிகள்சபைஅங்கத்தவர்கள்சிலர்-ஏன் சில மந்திரிகள்கூட மாவட்ட சபைகள் உருவாகுவதை எதிர்க்கிறார்கள். இதற்கு அவர்களின் இப்போதைய அதிகாரங்களில் பல பறிபோய் விடும் என்பதும் பொதுமக்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படும்என்பதும் தான் இதற்கு காரணம்''.

இவ்வாறு டாக்டர் நாகநாதன் இன்று பிரதிநிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்துள்ள திருத்தப்பிரேரணைகள்மீது பேசுகையில் கூறினர்.

**நீண்டதூரம்**

ராஜாங்க மந்திரி திரு. ஜே ஆர். ஜயவர்த்தனா பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கான முதல்நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கின்றது. ஆனல் இன்னும் பூரண ஐக்கியம் உருவாகி விடவில்லை. இன்னும் எவ்வளவோ தூரம் போகவேண்டிருக்கிறது. சங்கடங்களும் தடங்கல்களும் நிறைய இருக்கின்றன. இவை அனைத்தையும் சமாளிப்பதற்கு அரசாங்கம் உறுதிகொண்டிருக்கின்றது. ஒவ்வொருமனிதனும் தனதுமொழியும்மதமும் பாதுகாப்பாக இருக்கின்றனஎன்று திருப்தியடையச்செய்வதற்கான எல்லாவற்றையும் செய்ய அரசாங்கம் உறுதிகொண்டிருக்கின்றது. வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது பொருளாதாரத் துறையில் அரசாங்கம் எடுத்துள்ளமுக்கிய விஷயங்கள் தெரியவரும். உலகவங்கி இலங்கையில் தற்பொழுதுபொருளாதார நிதி ஸ்திரம் உருவாகியுள்ளதாக அறிவித்துள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

# வங்கி ஊழியர் பற்றி பிரதமர்

கொழும்பு, திங்கள்

'வங்கி ஊழியர்கள் வேலை உயர்வு, சேவைக்காலத்தைப்பொறுத்து இருக்க வேண்டுமெனக் கேட்கிறார்கள். ஆனல் அரசாங்க சேவையிலேயே இவ்வித முறை கையாளப்படாதிருக்கும்போது தனியார் துறையில் இந்தமுறையை செயல்படுத்துமாறு எப்படிக்கேட்கலாம் என பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணையின்போது கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார். எதிர்க்கட்சியைச்சேர்ந்த திரு. பேர்னட் சொய்சாவின்கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

# சதி வழக்கு எதிரி சரணடைவார்?

கொழும்பு திங்கள்

சதிவழக்கு சம்பந்தமாக பொலிஸாரினால் தேடப்பட்டுவரும் இரண்டாவது எதிரி சுனில் ஹேவகே, இம் மாதம் 25-ம் திகதி சதிவழக்கு விசாரணை ஆரம்பமாகும்பொழுது நீதிமன்றத்தில் ஆஜராகவிருப்பதாக பொலிஸார் எதிர்பார்க்கின்றனர்.

பிளேக்ஸ்டாவ் வீதியிலுள்ள நீதிமன்றத்தில் விசாரணைகள் ஆரம்பமாகும்பொழுது பிரதம மாஜிஸ்திரேட் முன்னிலையில் அவர் சரணடைவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு இவர் சென்றிருக்கலாமென்று சந்தேகிக்கப்பட்டபோதிலும் சுனில் ஹேவகே இலங்கையைவிட்டுச் செல்லவில்லையென்றே தாங்கள் நம்புவதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சுனில் ஹேவகேபற்றி தகவல் கொடுப்பவருக்கு ஆயிரம்ரூபா சன்மானம்கொடுப்பதாக பொலிஸ் பகுதி அறிவித்திருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# 23,000ல் 1,500!

கொழும்பு, திங்கள்

மேலதிகாரிகளுக்குபெரும் சிரமமாக இருக்கிறதாம். 1500 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் காலி ஸ்தானங்களுக்கு எட்டுப் பட்டதாரிகள் உட்பட 23,000 இளைஞர் மனுச்செய்துள்ளதாகவும் இவர்களிலிருந்து வேண்டியவர்களைத் தெரிவுசெய்வதில் பெரும் சிரமம் உள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விண்ணப்பதாரர்களில் அநேகர் பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் பயின்றவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவனின் மர்ம மரணம்

கொழும்பு, திங்கள்

14 வயதான வேலைக்காரச் சிறுவனொருவனின் சடலம் வெலிக்கடை பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த ஒரு வீட்டின் கிணறு ஒன்றில் கிடக்கக் கண்டெடுக்கப்பட்டுள்ளது, இவரின் மரணம் மர்மமானதாகத் தோன்றுகின்றது. காரணம் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை.

சிறிசேன என்ற இந்தப் பையன் தற்கொலை புரிந்து கொண்டிருக்க கூடும் என்ற பொலிசாரின் கூற்றில் நகர மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. எச். எம். இஸ்மாயில் திருப்தி அடையவில்லை.

இந்தச் சிறுவனின்மரணம் பற்றி முழு விபர சாட்சியங்களையும் பொலிசார் தமக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று கூறிய அவர் அந்த சாட்சியங்கள் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார். சாட்சியங்கள் சார்ஜன்ட் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டது குறித்து அவர் அதிருப்தி தெரிவித்தார். நாளையதினம்சாட்சியத்தின் முழு விபரங்களும் மரண விசாரணை அதிகாரியின் முன் சமர்ப்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## காணவில்லை

நாட்குறிப்புப் புத்தகம்:

எனது நாட்குறிப்புப் புஸ்தகம் 1ம், பில் புத்தகம் ஒன்றும் சிவன்கோவில் சந்திக்கும் ஐக்கியலாபநிதிக் கந்தோருக்குமிடையில் 16-7-66-ல் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கவும். K. கோபால், 270, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 770

## வைத்தியம்

தோய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய வை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING
ALBERT FINNEY
in
NIGHT MUST FALL
(MGM's Suspense Thriller)
( ADULTS ONLY )

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.கே. தியாகராஜ பாகவதர் நடித்த
சியாமளா

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம் ஜி ஆர் – சாவித்திரி நடித்த
வேட்டைக்காரன்

## விற்பனைக்கு

ஒலிபெருக்கி செற் மிகவும் உன்னத நிலையில் உள்ளது. பல மேலதிக உபகரணங்கள் உண்டு. விலை சகாயம் பார்வையிடவும்: மோஹன்ஸ், உத்தரவுபெற்ற மின்சார இணைப்பாளர்களும் ரேடியோ திருத்துபவர்களும் மெயின் வீதி, சங்கானை. 767

மெசின் வண்டிகள்

10'' உயரமும் 2'' கனமுமி கொண்ட றபர்ரையர் சில்லுகள் பொருத்தப்பட்ட தண்ணீர் இறைக்கும் மெசின் வண்டிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வேலமுகன் தொழிற்சாலை, சுன்னாகம். ஒன்றின் விலை ரூபா 150/- 760

வீடும் வளவும்

யாழ்ப்பாண நகரத்தில் நாலுபரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. மனுச்செய்யவும். 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7113 764

மாணவ ஆசிரியர்

மேற்படி பரீட்சையின் விண்ணப்பப் படிவத்திற்கு 10 சத முத்திரை 5 ஐ அனுப்பி பெற்றுக் கொள்ளவும். புதிய தமிழ் தட்டச்சு யந்திரங்களும் விற்பனைக்குஉண்டு. மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி. 769

கமமும், தோட்டமும்:

மன்னார் பூநகரி ரோட்டில் (மன்னாரிலிருந்து 15 3/4கட்டையில்) எனது சொந்தமான கமமும் தோட்டப்பிட்டியும் இருக்கிறது. கமம் 5 ஏக்கர், தோட்டப்பிட்டி ஏக்கர் 3 21 பேட். இவ் வாதனம் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் நேரில் வந்து என்னுடன் தொடர்பு கொள்ளலாம். அ. இராசேந்திரம், விடத்தல்தீவு. 771

## விற்பனைக்கு

பசு

(Red Paul) கொம்பில்லா பால் பசு விற்பனைக்கு உண்டு. செல்லையா, 18/3, சாமியார் வீதி, கொழும்புத்துறை. 766

**General Arts Qualifying Examination Classes**

Conduct at Chundikuli Girls' College, Jaffna. All subjects provided. Please apply early Mrs. S. Nadarajah C/o Miss M. Y. Muthiah, 12, Colombagam Road, Jaffna. 675


3-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்...... எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


# காட்டிலாகாவில் பொதுப்பணம் கொள்ளை போகிறது!

கொழும்பு, திங்கள்

தெற்கு மாகாணமாவட்ட காட்டிலாகா அதிகாரியினால் நடாத்தப்பட்டுள்ள விசாரணைகளின் விளைவாக, 1 1/2 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகை பொதுமக்கள் பணத்திலிருந்து சூறையாடப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.


சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக்கிடைத்த அநாமதேயப் பெட்டிஷன் ஒன்றின் மூலமாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டனவென்றும் அறியக்கிடக்கிறது.

காட்டிலாகாவின் பூசா டிப்போவுக்கு 7,500 ரயில் தண்டவாளக் கட்டைகள் விநியோகம் செய்ததற்காக, மேற்குறிப்பிட்ட பணத்தொகையை கொந்தராத்துக்காரருக்குக் கொடுத்ததாக கணக்குப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புத்தகத்தில் பொய்ப் பெயர்களே உபயோகிக்கப்பட்டுள்ளனவென்றும், தண்டவாளக் கட்டைகள் எதுவும் பூசா டிப்போவுக்கு விநியோகம் செய்யப்படவில்லையென்றும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

# நல்லூரில் கதிர்காம உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் கதிர்காம உற்சவ விழா நேற்று மாலை ஆரம்பமாகியது. தொடர்ந்து அடுத்தமாதம் 2-ம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும். இதே தினத்திலேயே கதிர்காமத் தீர்த்தோற்சவமும் நடைபெறுகிறது.




## கொழும்பு

செவ்வாய் 19 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

6-45 ஞானாஞ்சலி, 6-50 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 நேயர் விருப்பம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசைமெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 பல்லாங்குழல், 7-15 பேச்சு, 7-30 குதூகலம், 9-15 நாடகமஞ்சரி, 10-00 நேயர்விருப்பம்.

செல்வச்சந்நிதி

# யாத்திரீகர்கள் வசதிக்கு ஏற்பாடுகள்

வல்வெட்டித்துறை, திங்கள்

அடுத்தமாதம் 16-ந்திகதி ஆரம்பமாகி இருவாரங்கள் வரை தொடர்ந்து நடைபெறும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவகாலங்களில் சுகாதார வசதி, பாதுகாப்பு வசதி, குடிதண்ணீர் வசதி, ஆகியவற்றைச் செய்வதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும்பொருட்டு கிராமமுன்னேற்ற சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமை வகித்தார்.

பருத்தித்துறை காரியாதிகாரி திரு. ஏ. ஜி. விசுவநாதன், வல்வை வைத்திய அதிகாரி திரு. எஸ். பாலகிருஷ்ணன், டாக்டர் திரு. வி. ஜீவநாயகம், பருத்தித்துறைப்பகுதி இ. போ. ச. அதிகாரி திரு. என். பற்குணம், காங்கேசன்துறை உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டபிள்யு லியனகே, தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. வி. மூர்த்தி, வல்வை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பத்திரான, உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர் திரு. ஆர் ஆர். தர்மரத்தினம், பருத்தித்துறை கிராமமுன்னேற்றச்சங்க அதிகாரி, உடுப்பிட்டி சிதம்பராக் கல்லூரிகளின் சாரண ஆசிரியர்கள், கிராமசேவகர், சுகாதாரப்பரிசோதகர் ஆகியோர் இக்கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர். திரு அபயசேகரா ஒவ்வொரு பிரிவிலும் சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரிகள் அதிகாரிகள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றித் தெரிவித்தார்.

இதற்கான வேலைகளைக் கவனிக்கும் பொருட்டு மூன்று பேர் கொண்ட குழுவொன்றையும் அரசாங்க அதிபர் நியமித்துள்ளார்.

# 'மக்கள் நீதிநெறியை உணரவேண்டும்'

கோண்டாவில், திங்கள்

"அரசன் எவ்வாறு அரசு புரியவேண்டும்; நீதி நெறி எவ்வாறு அமையவேண்டும். மக்கள் எவ்வாறு இல்லறம் நடாத்தவேண்டும் என்பதை உலகமக்களுக்கும் அரசர்களுக்கும் உணர்த்தவே இறைவன் சோமசுந்தரபாண்டியன் என்ற மறுபெயருடன் மதுரையையடைந்து தடாதகைப்பிராட்டியார் என்ற பெயருடன் விளங்கிய பார்வதியை கடிமணம் புரிந்து அரச பொறுப்பை ஏற்றார்."

இவ்வாறு ஒல்லுடை ஞானவயிரவ சுவாமி கோவில் வீதியில் சைவப் புலவர் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற விழாவில் "தடாதகைப் பிராட்டியார்" என்னும் விடயம்பற்றிப் பேசிய திரு. த. சிதம்பரநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்துவான் சைவப்புலவர் வ. செல்லையா பேசுகையில் "சைவராகப் பிறந்தது நாம் முற்பிறப்பில் செய்த மாதவமே. எனவே நாம் எமது கடமை யாடு மாத்திரம் நின்றுவிடாது சமய வளர்ச்சியிலும் ஈடுபடவேண்டும் என்றார்.

## ஆடிப்பொங்கல்

சங்கானை, திங்கள்

நேற்று மாலை சங்கானை நாச்சிமார்கோயிலில் ஆடிப் பொங்கல்விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து கூட்டுப்பிரார்த்தனை திரு. மா. சண்முகவடிவேலுவின் தலைமையில் இடம்பெற்றது.

# விளம்பரம்

காணி எடுத்தற் சட்டம்
(அத்தியாயம் 460)
7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

கடித இலக்கம்:- எல். 4121

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணியை காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை இத்தால் பிரகடனப் படுத்தப்படுகிறது. முழு விபரங்களையும் 15-7-66-ம் திகதிகளில் வெளியாகும் 14704-ம் இலக்க அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை (III-ம் பாகம்) யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டபிரிவு: மட்டக்களப்பு.
கிராமத்தின் பெயர்: எருவூர் 4-ம் குறிச்சி.
பட இலக்கம்: பி. பி. மட். 1.
துண்டுகள் இலக்கம்: 1.
காணியின் பெயர்: பனங்கண்டடி வளவு.

து. சாமுவேல் தம்பையா,
உதவி அரசாங்க அதிபரும்
காணி எடுத்தல் அதிகாரியும்,
மட்டக்களப்பு மாவட்டம். 3660

# கூட்டுறவாளர் தினவிழா

சங்கானை திங்கள்

வலி-மேற்கு சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா இம்மாதம் 22, 23ந் தேதிகளில் சங்கானை வயிரவர் கோயில் வீதியில் நடைபெறும்.

கூட்டுறவுச் சங்கங்களின தும், சமாசத்தினதும் ஆதரவில் நடைபெறும் இவ்விழாவுக்கு திரு. க. கெங்காதரபிள்ளை தலைமைவகிப்பார். இரண்டாம் நாள் விழாவில் வடபாக உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

# "கூட்டுறவு அவசியம்"

கண்டி, திங்கள்

"மக்கள் விரும்பும் ஜனநாயக சோஷலிஸ வாழ்க்கை முறையை அவர்களுக்கு உறுதிப்படுத்தும் முக்கியமான வழிமுறைகளில் கூட்டுறவு வாழ்க்கை முறையும் ஒன்றாகும்".

இவ்வாறு நேற்று முன்தினம் கண்டி போகம்பறை மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவாளர் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா தமது பேச்சில் குறிப்பிட்டார்.


பவரின்
காய்கறிப் போரை



ஏ. பவர்
அண்ட் கம்பனி லிமிட்டெட்
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்ஸா நாடுகளின் உதவி குறித்து ரஸ்க் எச்சரிக்கை

## 'வடவியட்னமுக்கு தொண்டர்களை அனுப்பினுல் பேராபாயம்விளையும்'

### ஜெனீவா மகாநாட்டைக் கூட்டும் வில்ஸனின் யோசனையையும் ரஷ்யா நிராகரித்தது

வாஷிங்டன், ஜூலை 18

வார்ஸா ஒப்பந்த உறுப்பு நாடுகள். வடக்கு வியட்னமுக்குத் தொண்டர்களை அனுப்பினுல் அது பேராபத்தை ஏற்படுத்துமென்று அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் எச்சரித்துள்ளார்.

சில நாடுகள் மறைமுகமாக உதவி அளித்துவருவது கூட ஆறத்தான நடவடிக்கையாகவிருந்தபோதிலும் பகிரங்கமாக வார்ஸா நாடுகள் வடக்கு வியட்னமுக்கு உதவிகள் அளிக்க எண்ணுவது எதிர்பார்க்க முடியாத விளைவுகளையே ஏற்படுத்தும் என்றும் திரு. டீன் ரஸ்க் தெரிவித்துள்ளார்.

வடக்கு வியட்னமுக்கு ரயில் பாதைகளை அமைப்பதில் சீனு பெருமளவில் உதவி வருகிறது. இத்துறையில் கூட சீனு தனது உதவிகளைக் குறைத்துக் கொள்ளுமென்று அமெரிக்கா எதிர்பார்க்கிறதென்றும் திரு. டீன் ரஸ்க் கூறியுள்ளார்.

## "வியட்னம் யுத்தத்தில் சீனு பங்குபற்ருது"

பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஸ்டுவர்ட் நேற்று வியட்னம் நெருக்கடி பற்றி கருத்து வெளியிடுகையில், வியட்னம் யுத்தத்தில் சீனு பங்குபற்றும் என்று எதிர்பார்க்கமுடியாதென்றுகூறினுர்.

வியட்னம் நெருக்கடியில் சீனு கலந்து கொள்வதன் மூலம் பயங்கரமான விளைவுகள் தோன்றலாமென்பதை சீனு நன்குணர்ந்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்

## வியட்காங்கியருக்கு 40,000 வியட்னம் துருப்புக்கள் உதவி

அமெரிக்க உதவிப் பாதுகாப்பு மந்திரி நேற்று பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில், வடவியட்னம் தனது நிரந்தரமான துருப்புகளின் எண்ணிக்கையை இருமடங்காக்கியுள்ளது என்று தெரிவித்தார்.

தென்வியட்னமில் தாக்குதல்கள் நடத்திவரும் வியட்காங்கியருக்கு உதவியளிப்பதில் பதினுறு அணிகளைக் கொண்ட நாற்பதினுயிரம் வட வியட்னம் துருப்புகள் இப்பொழுது ஈடுபட்டுவருகின்றனஎன்றும் அவர் தெரிவித்தார்.

'வடக்கு வியட்னமில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதல்கள் பரவலான சேதத்தை ஏற்படுத்தியிருப்பதே, ஹோ-சி-மினின் புதிய படைதிரட்டல் திட்டத்தின் உள்நோக்கமாகும். அங்கு ஏராளமான திருத்த வேலைகள் நடைபெறவேண்டியிருக்கிறது' என்றும் அவர் கூறினுர்.

## ஹோவுக்கு சூ ஆதரவு

வடக்கு வியட்னம் அதிபர் டாக்டர் ஹோ-சி-மினின் படைதிரட்டல் உத்தரவுக்குச் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் ஆதரவளித்துள்ளார்.

வடக்கு வியட்னம் அதிபரின்யோசனைவரவேற்கத்தக்கதென்றும் இதற்கு சர்வதேச முறையில் உதவியளிக்கவேண்டுமென்றும் சீனப் பிரதமர் திரு. சூ என்-லாய் தெரிவித்துள்ளார்.

## ஜப்பான் கவலை; வாஷிங்டன் மௌனம்

உடனடியான படைதிரட்டலுக்கு வடக்கு வியட்னம் அதிபர் உத்தரவிட்டிருப்பது ஜப்பானில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. வியட்னம் நெருக்கடியைச் சமாதான மான முறையில் தீர்த்து வைப்பதற்கு ஹோவின் புதிய திட்டம் முட்டுக்கட்டையாகவிருக்குமென்றும், இருந்தபோதிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஜப்பான் தொடர்ந்து முயற்சிக்குமென்றும் டோக்கியோவில் ஜப்பான் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின்வியட்னம் கொள்கைக்கு ஜப்பான் தொடர்ந்து ஆதரவளித்து வருமென்றும் இவ்வதிகாரிகள் தெரிவித்துள்ளனர்,

வடக்கு வியட்னம் அதிபரின்படைதிரட்டல் யோசனை குறித்து வாஷிங்டனில் உடனடியாக கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை. கடைசியாக அதிபர் ஹோ-சி-மின் வெளியிட்ட செய்தியில், கைதுசெய்யப்பட்ட அமெரிக்க விமானிகள் குறித்து எதுவும் குறிப்பிடாதது அமெரிக்காவுக்குச் சிறிது ஆறுதல் அளித்திருப்பதாக வாஷிங்டனிலிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ரூபா 13,60,000 லாபம்

வெலிங்டன், ஜூலை 18

தனது டெலிவிஷன்சேவையிலிருந்து நியுஸிலாந்து ஒலிபரப்பு கமிஷன் கடந்த வருடம் 13,60 000 ரூபா லாபம் பெற்றுள்ளது.

(பி. டி. ஸி.)

## பஸ்மீது தாக்குதல்: பலர் மாண்டனர்

சைகோன், ஜூலை 19

சைகோனுக்கு வடக்கே 375 மைல்தூரத்தில் ஒரு பஸ்மீது வியட்காங்கியர் தாக்குதல் நடத்தியதில் பலர் மாண்டனர். 15 பேர் காயமடைந்தனர். வியட்காங்கியர் இயந்திரத் துப்பாக்கிகளினுலும் பிளாஸ்டிக் குண்டுகளினுலும் தாக்குதல் நடத்தினர்.

(பி டி ஸி)

## சுகர்ணே ஏற்றுக்கொண்டார்

ஜாகர்த்தா, ஜூலை 18

இந்தோனேஷியாவில் புதிய அரசாங்கமொன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது. புதிய அரசாங்கம் பற்றிய கருத்தை இந்தோனேஷிய நிர்வாகத் தலைவர் சுஹார்ட்டோ அதிபர் சுகர்ணேவிடம் நேற்று தெரிவித்தார் என்றும் அதனை சுகர்ணே ஏற்றுக்கொண்டார் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிய விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

அமெரிக்க விமானிகள்

## ஐ. அ. கு. குறிப்பு வடவியட்னம் நிராகரிப்பு

கெய்ரோ, ஜூலை 18

வடக்கு வியட்னமில் கைதியாகவிருக்கும் அமெரிக்க விமானிகளின் பாதுகாப்பு குறித்து ஐக்கிய அரபு குடியரசு சமர்ப்பித்த குறிப்பொன்றை ஏற்றுக்கொள்ள இங்குள்ள வடக்கு வியட்னம் தூதரகம் மறுத்துவிட்டது.

அமெரிக்காவின் கோரிக்கைமீது இக்குறிப்பை ஐ. அ. குடியரசு சமர்ப்பித்திருந்தது.

## இந்திய திறந்த வெளி சிறைச்சாலைகள்

டோக்கியோ, ஜூலை 18

இந்தியாவிலுள்ள திறந்த வெளி சிறைச்சாலைகள் போன்று அமைக்க ஜப்பான் ஆவல் கொண்டிருப்பதாக இங்கு கூறப்பட்டது.

## அரசாங்கம் நடவடிக்கை

சென்னை, ஜூலை 18

தமிழ் நாட்டில் அனல் [illegible] ஒன்றை நிறுவுவதென்று தமிழ் நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## கோஸிஜின் - வில்ஸன் வியட்னம் பற்றி பேசினர்

இதற்கிடையில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் இன்று ரஷ்யப் பிரதமருடன் வியட்னும் நெருக்கடி குறித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

இரு தலைவர்களும் வர்த்தக உறவுகள்குறித்து சுமார் 45 நிமிட நேரம் பேச்சு நடத்தினர்.

வியட்னும் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டவேண்டும் என்று பிரதமர் வில்சன் வற்புறுத்தியதாகவும் ஆனுல் இந்த யோசனையை ரஷ்யப் பிரதமர் கோஸிஜின் நிராகரித்துவிட்டார் என்றும் மாஸ்கோவிலிருந்து வெளிவரும் செய்திகள் கூறுகின்றன.

### அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

லண்டனிலும் ஸிட்டினியிலும் நேற்று அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. லண்டனில் சுமார் ஆயிரம் மாணவர்கள் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையைக்கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். லண்டனுக்கு விஜயம்செய்த ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட் நேற்று ஸிட்னி திரும்பியதும் அங்கு சுமார் 500 பேர் அமெரிக்காவின் கொள்கையைக்கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்பொழுதுபிரதமர் திரு ஹோல்ட் பேசுகையில், ஆசியாவின் முழுப்பாதுகாப்புக்கும் அமெரிக்கா உறுதியளித்திருப்பதாகத் தம்மிடம் தெரிவிக்கப்பட்டது என்று கூறினுர்.

## பாகிஸ்தான் - மலேசிய உறவுகள் சீரடையும்

### பிரதமர் துங்கு நம்பிக்கை

கோலலம்பூர் ஜூலை 19

மலேசியா— பாகிஸ்தான் உறவுகள் சீரடையும் என்று மலேசிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான்நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மந்திரிசபையிலிருந்து சூல்பிஹார் அலி புட்டோ விலக்கப்பட்டது ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கை என்று தெரிவித்த பிரதமர் துங்கு, மலேசிய— பாகிஸ்தான் உறவுகள் மீண்டும் ஏற்பட இதன்மூலம் ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அதற்கான சூழ்நிலை உருவாகிவருகிறதென்றும் கூறினுர்.

தாதிமார் படுகொலை

## ஸ்பெக்கின் விரல் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது

சிக்காக்கோ, ஜூலை 18

சில தினங்களுக்கு முன்னர் இங்கு எட்டு மாணவ தாதிமார்களைப் படுகொலை செய்ததாக றிச்சர்ட் ஸ்பெக் என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

உடைகளின் மீது இரத்தக்கறைகள் இருந்ததைக் கண்டு பொலிஸாரினுல் ஒரு ஹோட்டலில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர்தான் சிக்காக்கோ கோரக் கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டுவருகிறுர் என்பது பொலிஸாருக்கு உடனடியாகத் தெரியவில்லை! பொலிஸாரினுல் ஒரு ஆஸ்பத்திரிக்கு ஸ்பெக் அழைத்துச் செல்லப்பட்டபொழுது அங்குள்ள டாக்டர் ஒருவர்தான் ஸ்பெக்கை அடையாளம் கண்டார்.

ஆறடி உயரமும், நீல நிறக் கண்களும் கைகளில் பச்சை குத்தியிருந்தவருமான ஸ்பெக்கின் புகைப் படங்கள் நேற்று இங்குள்ள எல்லா பத்திரிகைகளிலும் முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

மாணவத்தாதிகள் கொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்து (விடுதி) சுமார் பதினைந்து மைல் தூரத்தில் உள்ள ஹோட்டலொன்றில் ஸ்பெக் கண்டுபிடிக்கப்பட்டிருந்தார்.

மாணவத் தாதிகள் எண்மரும் கொலைசெய்யப்படும்பொழுது ஒரு கட்டிலுக்குக் கீழே சுமார் ஐந்து மணி நேரம்வரை ஒளித்திருந்து உயிர் பிழைத்த 23 வயதுள்ள மாணவத் தாதி கொறஸொன் அமுறே ஸ்பெக்கின் புகைப் படத்தைஅடையாளம் கண்டுள்ளார். கோரக் கொலைகள் நிகழ்ந்த இடத்தில் காணப்பட்ட 345 விரல் அடையாளங்களில் 35 விரல் அடையாளங்கள் ஸ்பெக்கினுடையதென்று நிரூபிக்கப் பட்டுள்ளன. இவற்றில் சில படுக்கை அறையின் கதவுகளில் காணப்பட்டனவாகும். இந்த அறையில்தான் மாணவ தாதிகளை ஸ்பெக் அடைத்து வைத்திருந்தாராம்.

ஸ்பெக் ஏற்கனவே வேறு ஒரு குற்றத்துக்காக இரண்டு வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

பி. டி. ஸி.

## இந்தியா வரும் உல்லாச யாத்திரிகர்

புதுடில்லி, ஜூலை 18

கடந்த வருடம் இந்தியாவுக்கு ஒன்றரை லட்சம் உல்லாச யாத்திரிகர்கள் வந்திருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இவர்களில் அமெரிக்கர்களே அதிகமென்றும் இரண்டாமிடத்தை பிரிட்டிஷார் பிடித்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

## நாகர் பிரச்னைக்கு தீர்வு?

ஷில்லாங், ஜூலை 18

தலைமறைவு நாகர் பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காணும் வகையில் தலைமறைவு நாகர் தலைவர்கள் சில யோசனைகளை தெரிவிக்கவிருக்கிறுர்கள் என்று இங்கு கூறப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் நமக்கு வெகுதூரத்திலில்லை. நமக்குள்ளேயே இருக்கின்றார். அதை நாம் மறக்காமல், உணர்ந்து தெரிந்துகொள்ளவேண்டும். எதைச் செய்தாலும் அவருக்கு நாம் உண்மையாக இருப்பின், இந்த உணர்வு ஏற்பட்டு நமது வாழ்வும் புனிதமடையும்.

—சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆடி 3 (19-7-66)

## பாவனைக்குதவாத பாண்

சங்கானைப் பகுதியில் விற்பனையாகும் பாண்களில் வண்டுகளும் பூச்சி புழுக்களும் இருப்பதாகவும் இவை பாவனைக்கு உதவாதவையாக இருப்பதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. சங்கானைப் பகுதியில் மாத்திரமல்லாது நாட்டின் பல பகுதிகளிலும் இவ்விதம் குறை கூறப்படுகிறது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பணிஸ்களிலும் பூச்சி புழுக்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக இருந்து வரும் இக் குறை நீங்குவதாகத் தெரியவில்லை. எளிய மக்களின் முக்கிய உணவுப் பொருள்களில் ஒன்றான பாணும், பணிசும் பாவனைக்கேற்றவையாக இருக்கவேண்டியது அவசியம்.

பாவனைக்குதவாத, சுகாதாரத்துக்குக் கேடு விளைக்கக்கூடிய உணவுப் பண்டங்களும், பொருள்களும் சுகாதாரப் பகுதி அதிகாரிகளாலும், உணவுப்பரிசோதகர்களாலும் பரிசோதனை செய்யப்பட்டு அதற்குப் பொறுப்பானவர்கள் மீது வழக்கும் தொடரப்படுகிறது. இது வரவேற்க வேண்டியதே. ஆனால் பாண்களையும், பாண் தயாரிப்பதற்காக வழங்கப்படும் மாவையும் பரிசோதனை செய்யும் வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. மா விநியோகம் சரியான முறையில் நடைபெற்றால் பாண்களில் பூச்சி, புழுக்கள் இடம்பெறுவதற்கு வழி இருக்காது. ஆறு மாதங்களுக்குப் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மா சில இடங்களில் விற்பனை செய்யப்படாது இருந்தால் ஆறு மாதங்களுக்குப்பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட மா தேக்கி வைக்கப்பட்டு முன்னர் வழங்கப்பட்ட மா விற்று முடிந்த பின்னரே புதிய மா விற்பனை செய்யப்படுகிறது. இதனால் புதிய இறக்குமதியும் பழையதாகி பூச்சி, புழு அரித்து பழுதாகி விடுகிறது. பழுதான மா, பாவனைக்கு ஏற்றதல்லவென அழித்துவிடுவதில்லை. மா விநியோகம் சீரானமுறையில் நடைபெற்றால் இந்த நிலை ஏற்பட இடமிருக்காது.

இது தவிர பாடசாலைப் பிள்ளைகளுக்கு பணிஸ் தயாரிக்க வழங்கப்படும் மாவில் மோசடி நடைபெறுவதாக பல தடவைகளிலும் புகார் கூறப்பட்டுள்ளது. எனினும் நிலைமை சீரடையவில்லை. பணிஸ் தயாரித்து வழங்கும் பொறுப்பை அந்தந்தப்பகுதியிலுள்ள பொதுஸ்தாபனங்களிடம் அல்லது சங்கங்களிடம் ஒப்படைப்பது நல்லது. இவை பற்றி உணவு அமைச்சும், கல்வி அமைச்சும் கவனம் செலுத்தவேண்டும்.

## சிரமதானம்

பாஷையூர் துறையில் வள்ளங்கள் நேரடியாக கரைக்கு வருவதற்காக கடலை ஆழமாக்கும் பணி சிரமதானமாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. இந்த சிரமதானப்பணியில் ஈடுபட்ட சுமார் நூற்றிஐம்பது இளைஞர்களையும் பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்கத்தினர் மற்றும் பொது மக்களையும் அரசாங்க அதிபர் அந்த வைபவத்தில் கலந்து கொண்டு பாராட்டியிருக்கிறார். நாமும் அவர்களைப் பாராட்டுகிறோம்.

இலங்கையில் சிரமதான இயக்கம் வளர்ந்து வருகிறது. இதுவரை இங்கு வீதிகள் அமைத்தல், குளம் திருத்தல் முதலிய பணிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பொழுது கடலிலும் சிரமதானப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தங்கள் பிரச்னைகளையும் தேவைகளையும் தாங்களே கூடிய அளவுதீர்த்துக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். எப்பொழுதும் அரசாங்கத்தை நம்பியிருக்கக் கூடாது'' என்று அரசாங்க அதிபர் இந்தசிரமதான இயக்கத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார். கடலை ஆழமாக்கும் இந்த வேலை கூலிகொடுத்து செய்யப்பட்டிருந்தால் அதற்கு எப்படியும் பத்தாயிரம் ரூபாய் செலவாகியிருக்கும். மக்களும் அக்கறை செலுத்தியிருக்கமாட்டார்கள்; வேலையும் திருப்தியாக அமைந்திருக்கமாட்டாது. தங்கள் தேவைகளைத் தாங்களே செய்து முடிக்க வேண்டுமென்ற ஆர்வமும் கூலிக்குவேலை செய்வதைவிட தங்கள் தேவையை தாங்களே செய்துமுடிக்க வேண்டுமென்ற தொண்டு மனப்பான்மையும் மக்கள் மனதில் தோன்றியிருப்பது சமுக ஒற்றுமைக்கும் வருங்கால முன்னேற்றத்துக்கும் நம்பிக்கை அளிப்பதாகும் சிரமதான இயக்கம் மேலும் வளர்ந்து தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றிக்கொள்ளும் பண்பு நமது மக்கள் மனதில் நிலைபெறவேண்டும்.

## தொழில் நுடபாளர் தட்டுபாடு

கொழும்பு, செவ்

அரசாங்கத்தின் புதியநில. நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டங்களுக்கான வேலைக்குப் போதியளவு எஞ்ஜினியர், தொழில் நுட்பாளர் தருவதற்கு நீர்ப்பாசன இலாகாவில் முடியாதிருக்கிறதெனத் தெரிகிறது. இத்தட்டுப்பாட்டைப் போக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

தற்போது கல்கமுவவில் இருக்கும் பயிற்சிக் கல்லூரியில் வருடம் 50 தொழில் நுட்ப உதவியாளர் வரை பயிற்சி பெற்று வருகின்றனர் ஆனால், நீர்ப்பாசன இலாகாவின் விரிவடைந்த திட்டத்துக்கு இந்தத்தொகை போதாது.

ஆகவே பயிற்சிக் கல்லூரியை விஸ்தரிக்கவும், புதிய உபகரணங்கள் வாங்கவும் காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சு அரசாங்கத் திடம் விண்ணப்பித்துள்ளது. அமைச்சு வட்டாரங்களின் படி வருடம் 200 மாணவர் [illegible] ரூபா தேவையென்று தெரிகிறது.

## 'ஜனப் பெருக்கம் போல உணவு உற்பத்தி அதிகரிக்கவில்லை'

### கூட்டுறவாளர் விழாவில் பேச்சு

சுழிபுரம், திங்கள்

''மக்கள் இயக்கமாக இருந்துவந்த கூட்டுறவு இயக்கம் கடந்த அரசாங்கத்தால் ஓர் அரசாங்க இயக்கமாக மாற்றப்பட்டு வந்தது. இதனால் கூட்டுறவுத்துறைக்கே பெரும் இடர் ஏற்பட்டது. கூட்டுறவு இயக்கத்தினர் ஏற்படுத்திய பலத்த எதிர்ப்பின் காரணமாகவே இன்றைய தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் கூட்டுறவு இயக்கம் சர்வதேசிய இயக்கமாக வளரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'' என சர்வதேசக் கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டுப் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினர் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடாத்திய விழாவில் பேசும்போது வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

விழாவுக்கு பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க சமாஜத்தலைவர் திரு. என். ஜேம்ஸ் தலைமைவகித்தார். பிரதமவிருந்தினராக யாழ். மேற்கு கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை விழாவில் கலந்து கொண்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் எதற்காக சர்வதேசக் கூட்டுறவாளர்தினவிழா வருடாவருடம் கொண்டாடப்படுகிறதென்பதை நாம் சிந்திக்கவேண்டும். மனிதன் தவறுவிடுவது சகஜம். அத்தவறை மேலும் விடாமல் இருப்பதற்கும், கூட்டுறவு இயக்கத்தில் தனது பங்கு என்னவென்பதைத் தெரியப்படுத்துவதுமே இதன் முக்கிய நோக்கமாகும். உலகம் இன்று இயந்திரத்துறையில் முன்னேறிக்கொண்டு போகின்றது. இதனால் தனி மனிதன் தனது உழைப்பு மூலம் முன்னேறமுடியாமல் இருக்கிறது. இவற்றைப் போக்க மக்கள் தாமாகவே சேர்ந்து நவீன முறையில் ஜனநாயக தத்துவத்துக்கமைய புனிதமான முறையில் நடாத்தும் இயக்கம் தான் கூட்டுறவு இயக்கமாகும். கூட்டுறவு இயக்கம் ஜனநாயக நாடுகளில் அரசாங்கத்தால் நடாத்தப்படுகிறது.

கம்யூனிஸ் நாடுகளில் அரசாங்கத்தால் நடாத்தப்படுகிறது. கூட்டுறவு இயக்கம் புனிதமானது. அதன் பரிசுத்தத்தை விளங்கச்செய்வது ஒவ்வொரு பிரஜையின் தலையாய கடமையாகும்.

வலி. மேற்கு காரியாதிகாரி திரு. எஸ். மாணிக்கநடராஜா பேசுகையில் எமது நாட்டின் அபிவிருத்தி உற்பத்தியிலும், உணவுப் பெருக்கத்திலும் தான் அதிகம் தங்கியுள்ளது. இன்று மனிதப் பெருக்கத்தைப் போல் உணவுஉற்பத்தி அதிகரிக்கவில்லை. இதனால் எமக்குப் பெரும் கஷ்டம் ஏற்படவிருக்கிறது. எமக்காக நடாத்தப்படும் சங்கங்கள் நாட்டின் நிலைமைக்குத் தக்கவாறு உழைக்கவேண்டும். அப்போதுதான் அதன் பணி மேலோங்கும். பண்டத்தரிப்பு கிராமசபைத் தலைவர் திரு. இராமலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்குத் திருமதி கே. எஸ். பொன்னுத்துரை பரிசில்களை வழங்குனர்.

## 'தி. மு. க. மந்திரி சபை அமைப்பது உறுதியாகிவிட்டது!'

### கருணாநிதி முழக்கம்

மதுரை, ஜூலை 11

'தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஆட்சிக்குச் சாவுமணி அடித்தாகிவிட்டது. 1967 பொதுத்தேர்தலுக்கு பின்பு தி. மு. க. மந்திரிசபை அமைப்பது உறுதியாகிவிட்டது' என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் ஒருவரான கலைஞர் மு கருணாநிதி கூறினார்.

மதுரையிலுள்ள சமய நல்லூரை அடுத்த தோடனேரிக் கிராமத்தில் தி. மு. க. தேர்தல் நிதி வழங்கும் விழா மதுரை எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற போதுதான் திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கருணாநிதி மேலும் பேசுகையில் சொன்னதாவது:-

'நாம் தேர்தல்நிதி வசூல் செய்வது தொண்டர்கள் தேர்தல் நேரங்களில் பசிக்கு டீயாவது குடித்துக்கொண்டு பாடுபட வேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் காங்கிரஸ்காரர்கள் உங்களிடம் உள்ள வோட்டுக்களை விலைகொடுத்து வாங்குவதற்காகவே பல கோடி ரூபாய்களை தேர்தல் நிதியாகச் சேர்க்கிறார்கள்.

தி. மு. க, தொண்டர்கள் வறுமையின் சின்னங்கள். உங்கள் நன்மையே அவர்கள் நன்மை. காங்கிரஸ்காரர்களைப்பற்றி நான்சொல்ல வேண்டியதில்லை.

---

## மனோவசிய மூலம் மகவு பிறந்தது!

அடிலெயிட், ஜூலை 18

தனது குழந்தை பிறப்பதற்குரிய காலத்துக்கு ஒரு வாரம்முன்னதாகவே தனது கணவன் மனோவசியம் மூலம் தன்னுடைய குழந்தையைப் பிறக்கச்செய்தாரென்று இங்கு 21-வயதுத் தாய் கூறியுள்ளார்

இப்பெண்ணின் கணவன் கூறியதாவது:-

இவ்வாரம் நான் சும்மாதான் வீட்டிலிருந்தேன். அடுத்தவாரமே எனக்கு வேலையிருந்தது. ஆகவே குழந்தையை இவ்வாரமே பெற்றுவிட்டால் நல்லது என்று எண்ணினேன்.

இதன்படி பிற்பகல்மூன்று மணியளவில் எனது மனைவியை மனோவசியம் செய்தேன். 'இரவு 11 மணிக்கு நீ குழந்தையைப் பெறுவாய்' என்று கூறினேன். சரியாகப் பதினொரு மணிக்கு இப் பெண் குழந்தையொன்றை பிரசவித்தாள்'

## ஐயாறன் எழுதுகிறது

''வாழும் தமிழ்'' என்ற பெயரிலே திரு. கி. வா. ஜ. மணிவிழாவில் அழகான தோர் வாசம்மிக்க மலரை வெளியிட்டிருக்கிறார்கள். விழாவுக்காக சென்னைக்கு ஈழத்திலிருந்து சென்றிருந்த ஓர் அன்பர் அம்மலரைக் கொண்டு கொடுத்தார்.

இம்மலரிலே கி. வா. ஜ. அவர்களே தமது வாழ்வின் நோக்கத்தைப்பற்றி எழுதியுள்ளது என்மனதைப் பெரிதும் கவர்ந்தது. பலமுறை படித்தேன். மணிமணியான அவரது எழுத்தைஅப்படியே 'பிளாக்' செய்து வெளியிட்டிருக்கிறார்கள். படம் போட்டு வீட்டிலே முக்கிய இடத்தில் இதை மாட்டி வைத்துக்கொண்டால் நல்லது போல் தோன்றுகிறது.

''அமைதியான வாழ்வு'' என்ற தலைப்புடன் அவர் எழுதியுள்ளதை அப்படியே தருகிறேன். தம் வாழ்க்கையின் நோக்கமும் எப்படி இருக்க வேண்டுமென்பதை நமக்கு அவர்மறைமுகமாக உபதேசிக்கிறார். படியுங்கள்'

ஃ ஃ ஃ

''படித்தவன், உடல்வலிமையுள்ளவன், பணமுள்ளவன் என்று புகழும் இன்பமும் அடைபவர்கள் இருக்கிறார்கள். கல்வி, உடல் வலிமை, பொருள் - இந்த மூன்றையும் ஓரளவு பெற வேண்டும் என்ற ஆசை எனக்கும் உண்டு. ஆனால் இவற்றைவிட நான் மிகுதியாக விரும்புவது நல்லவன் என்று பலரும் சொல்வதைத்தான். அவ்வாறுபிறர் சொல்லவேண்டுமானால் உண்மையில் நல்லவனாக இருக்கவேண்டும்.

''நல்லவனுக்குள்ள பண்புகள் பலஉண்டு. பொறுமை, நன்றியறிவு, உபகார சிந்தை, இன்சொல், நட்பு முதலிய பல பண்புகள் ஒருவனை நல்லவனாக்குகின்றன. எல்லாப் பண்புகளிலும் சிறந்து நிற்பது அன்பு. அதை வளர்த்தால் மற்றப்பண்புகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தாமே வந்து அமையும். அன்பை வழங்குவாருக்கு அன்பே கிடைக்கும்.

''ஆனால் அன்பை வளர்ப்பதற்கு மற்றோர் உணர்ச்சி இன்றியமையாதது. என்றும் மாறாமல் எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்கும் இறைவன் அருள் ஒன்றே நிலையானது, சிறந்தது. எல்லாவற்றுக்கும் ஆதாரமானது என்ற உணர்ச்சி இருந்தால் உயிர்க்கூட்டங்கள் அவனுடைய குழந்தைகள் என்ற எண்ணம்தொடர்ந்துவரும். அப்போது உயிர்களிடத்தில் அன்பு உண்டாகும்.

''ஆகவே இறைவனிடம் மெய்யன்பு முறுகினால் உயிர்களின்மேல் அன்பு விரியும். கோபம், பொறாமை, கடுஞ்சொல் தோன்றும்போதெல்லாம் இறைவனநினைப்பூட்டிக்கொண்டால் நிரந்தரமாக நிற்பது அன்பு ஒன்றுதான் என்ற உணர்வுவரும். சிறிதுசிறிதாக இறைவனிடம் நம்பிக்கையை வளர்த்து மக்களிடம்அன்பையும் வளர்த்துவந்தால் மனிதனுக்கு எதனாலும் துன்பம் உண்டாகாது. அவன் மனம் எப்போதும் அமைதியாக இருக்கும்.

இந்த அமைதியைப் பெறவே பல ஆண்டுகளாக முயன்றுவருகிறேன்.

கி. வா ஜகந்நாதன்'

ஃ ஃ ஃ

அம்மலரிலே பல பெரியார்களும் அன்பர்களும் வாழ்த்துச் செய்திகளையும் கி. வா. ஜ. அவர்களைப் பற்றிய ருசியான கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளனர். 1929 ம் வருஷத்திலே

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து வாரங்களில் ரூ. 200 லட்சம் நஷ்டம்!

## தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் விளைவு

கொழும்பு, திங்கள்

தோட்டத் தொழிலாளருக்கும் பதினேழு ரூபாய் ஐம்பது சதம் விசேஷ பஞ்சப்படி வழங்கப்படவேண்டுமெனக் கோரி ஜனநாயகக் காங்கிரஸ் நடத்திவரும் வேலை நிறுத்தம் காரணமாக இதுவரை நாட்டின் வருமானத்தில் 2 கோடி ரூபாவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தோட்ட முதலாளிகள் சம்மேளனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தோட்டங்களில் தேயிலை செய்யவோ அன்றி றப்பர் எடுக்கவோ முடியாததால் வாரமொன்றுக்கு 40 லட்சம் ரூபா நஷ்டமேற்படுகிறதென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பருவ காலத்தில் கொய்யப்படவேண்டிய உவர்த்தேயிலை வேலைநிறுத்தம் காரணமாகச்செய்யப்படாமல் பழுதடைந்துவருவதாலும் அதிலும் பெருந்தொகைக்கு நஷ்டம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 35-வது நாளாகத் தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தம்நடைபெற்று வருகிறது.

தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவடைவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லையென நெருங்கிய வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

### வங்கி ஊழியர் வேலைநிறுத்தம்

வங்கி ஊழியர்வேலை நிறுத்தத்தைத் தீர்த்து வைப்பதற்கு வங்கி ஊழியரும், நிர்வாகிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சமரசத் திட்டங்களை தயாரிப்பதில் தொழில்இலாகா தீவிரமுயற்சிகள் எடுத்து வருகிறது

### நெசவாலை வேலை நிறுத்தம்

ஜவுளிக் கார்ப்பரேஷனின் வியாங்கொடை நெசவாலைத் தொழிற்சாலை ஊழியரின் வேலை நிறுத்தம் 37-வது நாளாகநடைபெறுகிறது. தொழிலாளர் வேலைக்குத் திரும்பும்வரை போனஸ் விஷயமாக பேச்சுவார்த்தை எதுவும் நடைபெற இடமில்லை என கார்ப்பரேஷன் தலைவர் லக்ஷ்மன் ராஜபக்ச தெரிவித்தார்

### பரிசளிப்புவிழா

திருக்கேதீஸ்வரம், திங். அடம்பன் மகாவித்தியாலயப் பரிசளிப்புவிழாவும், பெற்றோர் தினமும் முதன் முறையாக இம்மாதம் 27ந் தேதி நடைபெறவிருக்கின்றது.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட உதவி வித்தியாதிபதி திரு.எஸ்.தணிகாசலம் பிரதமவிருந்தினராககலந்து கொள்வார்.

### 'நாட்டின் மதிப்பை உயர்த்துவது பொருளாதாரம்'

உடுப்பிட்டி, திங்கள்

''ஒருநாட்டின் பொருளாதாரம் அந்நாட்டின் மதிப்பைப் பெருமளவில் உயர்த்தும். எங்கள் நாடு வளமில்லாத நாடு என்று பிறர் கூறுவதைக் கேட்கும் பொழுது வேதனையுண்டாகிறது. நெற்காணுபடியினுல் நாம் சுமார் 600 ரூபாய்க்கு மேல் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. வடமராட்சிப்புகையிலையை வெளிநாடுகட்கு ஏற்றுமதிசெய்ய முடியுமா என்பது பற்றி அமைச்சு ஆராய்ந்து வருகிறது. வரண்ட நிலங்களை நல்லமுறையில் பயன்படுத்தலாம். வாலிபர்கள் எவ்வினத்தவர்களாயிருந்தாலும்சரி கடற்றொழில், கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபடவேண்டும். பொதுமக்களின் ஒற்றுமையின்மையே பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம்'' என்று பருத்தித்துறை எம். பி. திரு. க துரைரத்தினம் தமிழரசு வாலிப முன்னணியின் கரணவாய் தெற்குக் கிளையைக் காலஞ்சென்ற சுவாமிநாதர் இல்லத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இம்மாதம் 23-ம் திகதி பொதுக்கூட்டம் நடாத்துவதெனவும், அன்றையதினம் புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது. வேறு பலரும் கூட்டத்தில் பேசினர்.

### வயோதிபர் விடுதியில் வழிபாடு

யாழ்ப்பாணம், செவ்

கைதடி வயோதிபர் விடுதிச்சாலையில் சைவ பரிபாலன சபையின் சார்பில் விசேஷ வழிபாட்டுக் கூட்டம் நடைபெற்றது. திருமுறைகளைப் பண்ணோடு சங்கீத பூஷணம் திரு. இ. நடராசா ஓதினர்.

சபைச்சமயப் பிரசார அமைச்சர் சித்தாந்த சிரோமணி தலைமைவகித்துப் பேசும் பொழுது இறைவழிபாடு இன்பம் பெறவழியெனக் கூறினர். வித்துவான் க, கணபதிப்பிள்ளை வயோதிப விடுதியின் சமய நிலையைப்பாராட்டி வயோதிப வயதில் அப்பர் சுவாமிகள் ஆற்றிய வீரப் பணியைக் குறிப்பிட்டார். திரு. சி யோகநாதன் விடுதிச்சாரபில் நன்றி கூறினர்.

### சௌகரியப் பிரயாணம்

கொழும்பு, திங்கள்

பொதுமக்களுக்கு சௌகரியமான சேவையை அளிப்பதற்கு இ போ ச வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதாக இ போ ச வின் உபதலைவர் மேஜர் டி' லிவரா தெரிவித்தார். [illegible] [illegible] பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

### தெல்லிப்பழை

## பாலர் ஞானோதயசபை 20-ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபையின்20-வது ஆண்டுப் பரீட்சைகள் சமயம், வாய்ப்பாட்டு, மிருதங்கம் ஆகிய மூன்று பகுதிகளாக நடைபெற்றது முடிவுகள் வருமாறு:

பாலர் பிரிவு: திறமையானசித்தி: இ. பவானந்தன், வா. அகிலன், இ. ஜெகதீஸ்வரன்.

முதலாம் பிரிவு: திறமையான சித்தி: ம. ஞானகுமாரி, க. கனகதயாவாணி, க. கிருபேந்திரன்.

இரண்டாம் வகுப்பு: திறமையானசித்தி: மு. முருகதாஸன், (சாதாரணசித்தி) இ இரத்தினேஸ்வரன், மு. ஞானேந்திரன்.

மூன்றும் வகுப்பு: திறமையானசித்தி: க. ரவீந்திரன், த. நந்தினி, சொ. சிவனேஸ்வரி, வா. சயந்தன், மு. சிவபாஸ்கரமூர்த்தி, ந. ஜெயமணி.

மூன்றும வகுப்பு 'ஏ': விசேட சித்தி- ம. ஞானகுமார், ந அனுஷா. திறமையான சித்தி: மு. சுதாகரன், நா. சிவசங்கரன், சு மகாதேவி, சி. சிவதேவி இன்பமலர்

நான்காம் வகுப்பு: விசேஷ சித்தி- சொ கணேஸ்வரி, செ. மகாலட்சுமி, க. கனகதயாநந்தி. சாதாரணசித்தி, வா: நவநீதன், பொ. இராசலட்சுமி, சி. இந்திராணி, சி ஜெயச்சந்திரன்.

ஐந்தாம் வகுப்பு- விசேஷ சித்தி: ம. ஞானரதி, நா. சிவகுகன், அ. தேவிகாராணி. திறமையான சித்தி: மு. பிரபாகரன், த ரஞ்சினி, சிவசுப்பிரமணியம். க. லோகேஸ்வரி, அ. தேவராஜன். சாதாரணசித்தி: சி சிவசோதி, சோ.கார்த்திகைகுமாரன், க. கனகதயாபரி, இ. தனேஸ்வரன்.

ஆறும் வகுப்பு: விசேட சித்தி: ஆ. இராசேஸ்வரி. திறமையான சித்தி: சொ. யோகேஸ்வரி, த. கனகதயாவதி, க. சரோஜினி. சாதாரண சித்தி: சொ. கணேஸ்வரன், சி தர்மதாஸ், சு வரதராஜன், ச மனோரஞ்சிதமலர்.

ஏழாம் வகுப்பு: விசேஷ சித்தி: சொ யோகேஸ்வரன் திறமையான சித்தி: சி சிவமணி, ச தர்மினி. சாதாரண சித்தி: ம ஞானரூபி, சு இராசலட்சுமி. வா கதிர்காமநாதன்.

எட்டாம் வகுப்பு: விசேஷ சித்தி: மு கீதாஞ்சலி, திறமையான சித்தி: க தயாளகேசரி, சாதாரண சித்தி: ம ஞானகாந்தி, க கனகதயாளன், பொ சகுந்தலாதேவி.

ஒன்பதாம் வகுப்பு: விசேஷ சித்தி: நா சிவகுமாரன், திறமையான சித்தி: கு சிவபாலன்.

வாய்ப்பாட்டு ஆரம்ப பிரிவு- பொ. சகுந்தலாதேவி, க. கனகதயாபரி, சு. இராசலட்சுமி, த. சரோஜினி, சி. சிவதேவிஇன்பமலர். கீழ்ப்பிரிவு- ம. ஞானரதி, மு. கீதாஞ்சலி, க. கனகதயாவதி, ம. ஞானகாந்தி, இ. சரோஜினிதேவி, சொ. யோகேஸ்வரி, க. கனகதயாளன்.

மிருதங்கம் கீழ்ப்பிரிவு- நா. சிவகுகன், ச. சிவசுப்பிரமணியம், சோ. கார்த்திகைகுமாரன். மத்தியபிரிவு- சு. வரதராஜன், வா. கதிர்காமநாதன், க, தயாளகேசரி.

## 'தாய் மொழியில் இலங்கை பூராவும் தமிழ்ப்பிள்ளைகள் கல்வி கற்கவசதி செய்க'

### முன்னாள் கல்லூரி அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், செவ்.

'கல்வியானதுசமூகத்தைச் சிராக்கி வளம்படுத்தும் ஒரு முக்கியமான விஷயம் அதில் எந்தவிதமான மாற்றத்தை அரசாங்கம் செய்தாலும் அது இலங்கையில் உள்ள குடும்பங்கள் அத்தனையையும் பாதிக்கும் செயலாகும். எனவே அரசாங்கம் தன் விருப்பப்படி கல்வியில் மாற்றம் செய்வதற்கு உரிமையில்லை. பெற்றோரினதும் பொதுமக்களினதும் ஆலோசனையின்றிச் செய்யும் நடவடிக்கை ஜனநாயகமற்ற செயலாகும்' இவ்வாறு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட பெற்றோர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் திரு. கே. நேசையா பேசுகையில் கூறினர்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில், ''அரசாங்கம் எப்படி எதிர்பாராதவிதமாகத்திடீர்திடீரென்று அவசரகாலச்சட்டத்தை காலத்துக்குக்காலம் கொண்டுவந்ததோ அதேபோல் கல்வியிலும் மாற்றத்தைக்கொண்டு வந்துள்ளது. இப்படி அவசரமாகக் கொண்டுவந்த உயர்தரக் கல்வி மசோதாவை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்,''

இவ்விஷயத்தில் மந்திரிக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் அதிகமான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதும் அதே சமயத்தில் கல்விசம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசியாமல் முடிவுசெய்வது ஜனநாயகமற்ற செயலாகுமென்றும் கூறினர்.

திரு. எஸ். ஹண்டி பேரின்பநாயகம் பேசும்போது கல்வி விஷயத்தில் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் சமஉரிமைகளுடன் இலங்கை முழுவதும் இருக்கவேண்டும் என்றும் ஆனல் தமிழ்ப்பிள்ளைகளைப் பொறுத்தளவில் சிங்களப் பிள்ளைகளிலும் பார்க்க உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றதென்றும் இலங்கை முழுவதும்தமிழ்ப்பிள்ளைகள் தாய்மொழியில் கல்விகற்க வசதியளிக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கூட்டமுடிவில் நடைபெற்ற புதியநிர்வாகசபைத் தெரிவில் திரு. கே. நேசையா தலைவராகவும், திரு. டி. ஆர். குணசேகரம் உபதலைவராகவும், திரு. என். பொன்னையா செயலாளராகவும், திரு. என். சரவணமுத்து உபசெயலாளராகவும், பி. சேனாதிராசா தனாதிகாரியாகவும், எஸ். ஸ்ரீநிவாசன், ஏ தையல்பாகர், ஜி ரீ. ஆசிநாதன். எம். மகாலிங்கம், திரு. செல்வநாயகம் ஆகியோர் அங்கத்தவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## சர்வகலாசாலை பிரச்னைக்கு வட்டமேசை மகாநாடு

கடந்த பத்து ஆண்டுகளின் பின் ஈழத்திருநாட்டில் என்றும் ஏற்பட்டிருக்காத அளவுக்கு ஒரு நல்ல கூட்டுறவுள்ள அரசியற் சூழ்நிலை சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. இது கண்டு நல்லெண்ணம் விரும்பும் சகல இனத்தவர்களும் மகிழ்ச்சி அடைவர். குறிப்பாக தமிழ்ப் பேசும் மக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இப்படியானதோர் சிறந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கு நன்மனதுடன் பிரதமருடன் ஒத்துழைத்து எமது தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் தலைவர்கள் இன்று தமக்குள் சண்டை இடுவதனைப் பார்த்து பெரும்பான்மையினர் கேலி செய்கின்றனர். தமிழ் மக்கள் மனம் வருந்துகின்றனர். குறிப்பாக தமிழ் பேசும் மக்களுக்கு சர்வகலாசாலை வேண்டுமென்ற விஷயத்திலேயே எமது தலைவர்களுக்குள் பெரிதும் வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இது இன்று ஒரு பெரும் பிரச்னையாக அமைந்துவிட்டது.

கல்வி சம்பந்தமாக ஏற்பட்டுள்ள இப்பிளவு மனப்பான்மைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கச் செய்வது தமிழ் அறிஞர்களது கடமையாகும். சர்வகலாசாலை மூலம் தான் வருங்காலத்தில் நாட்டை ஆளும் தலைவர்களையும் அரசாங்கத்தை நிர்வகிக்கும் அறிஞர்களையும் உருவாக்க வேண்டும். கல்வியின் உயர் நிலையமான சர்வகலாசாலையை அமைக்கும் விஷயம் அரசியலில் சிக்கித் தவிப்பது பெரிதும், ஆபத்தானதாகும்.

சர்வகலாசாலை விஷயத்தினை அரசியலுக்கு வெளியில் பிரித்தெடுக்கவேண்டும். இதனை அரசியல் தலைவர்கள் தங்களுக்குள் மாத்திரம் ஆலோசிக்காமல், தமிழ்பேசும் தலைவர்கள், அறிஞர்கள், சமயத் தலைவர்கள் இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஒரு வட்டமேசை மகாநாட்டினைக் கூட்டி அரசியற் பிரச்னைக்கு அப்பாற்பட்டதோர் பிரச்னையாகக் கருதி ஆலோசித்துத் தீர்க்க வேண்டும்.

அ. யேசுதாசன்,

கொழும்பு.

ஃ ஃ ஃ

## இ. போ. ச. அறியுமா?

இதுவரை காலமும் கண்டி வீதி வழியாக அரியாலையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை கடந்த 14-ந் திகதி முதல் சுண்டிக்குளி கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி ஊடாக அரியாலைக்குத் திரும்பியதன் விளைவாக அரியாலை மக்களுக்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

அரியாலையில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளில் பலர் கல்வி பயில்வது கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்தில், அரியாலைமக்கள் தம் தேவைப் பொருட்களை பெற்றுக்கொள்வது நெடுங்குளம் சந்திக்கும் கச்சேரிக்கும் இடைப்பட்டுள்ள கூட்டுறவுக் கடைகளில் ஆகும். அரியாலையில் உள்ள காணிச் சொந்தக்காரர்களும், கமக்காரர்களும் வசிப்பது பெரும்பாலும் நெடுங்குளம் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் உள்ள சுற்றுடல்களில் இவை இப்படி அமைந்திருக்க அரியாலை பஸ்ஸை

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாடும் நாமும்

## மாணவர் மனமுறிவு

மாணவர்கள் வகுப்பில் பின்தங்கி இருப்பதற்கு அனேக காரணங்கள் உள. ஒரு வகுப்பில் உள்ள பின் தங்கிய மாணவனொருவனை எடுத்துக்கொண்டால் அவன் கல்வியில் பின்னடைந்திருப்பதற்கு அவனது உள்ளத்திலே ஏற்பட்ட மன முரண்பாடோ அல்லது அவனது உடல் உள்ளம் முதலியவற்றுள் ஏற்பட்ட கோளாறே காரணமாக இருப்பதை நாம் அறியலாம்.

அறிவை மிகவும் பாதிக்கலாம். இவைகளினால் ஏற்படும் மனமுறிவு, மன முரண்பாடு ஆகியன ஒரு மாணவனது அல்லது ஒரு மாணவியினது அறிவு வளர்ச்சியை — கல்வியை — வெகுவாகப் பாதிக்கலாம்.

மன முறிவுகள், பல காரணங்களினால் ஏற்படலாம். கெட்டபெயர் வாங்கிய குடும்பமொன்றில் (உதாரணமாக ஒருவனது குடும்பத்தில் பரம்பரையாக கொலை வழக்குகளில் ஈடுபட்டோர், சிறைசென்றோர் இருப்பது) அல்லது அழகின்றி பிறந்திருப்பது ஆகியன மன

— வண்ணை சே. சிவராஜா B. Sc —

இவைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து மாணவருக்குத் தகுந்த கல்வியைப் புகட்டுவது, ஆசிரியர்க்குரிய தலையாய கடனாகும். காலத்திலே இவைகளுக்குப் பரிகாரம் தேவைப்படாவிடில் இந்நிலை மாணவர் வாழ்விலே பின்தங்கியவராகவும் குடும்ப வாழ்வில் செழுமை யுற முடியாதவராகவும் வர நேரிடலாம்.

### வீட்டுச் சூழல்

வீட்டில் கட்டுப்பாடற்ற தன்மைகளும் ஒரு பிள்ளையினது அறிவைப் பாதிக்கலாம். பெற்றோர் அடிக்கடி தங்கள் பிள்ளைகளின் முன்னிலையிலேயே சண்டையில் அல்லது சூது, மது இவைகளில் ஈடுபடல் என்பன பிள்ளைகளின் அறிவுவளர்ச்சியைப் பாதிக்கும். சில குடும்பங்களில் பிள்ளைகள் மீது அதிக கட்டுப்பாட்டை விதிப்பதும் அல்லது கடூரமாக நடந்துகொள்வதும், மாணவர் உள்ளத்தைப் பாதித்து ஈற்றில் கல்வியில் முன்னேறவிடாது தடுக்கின்றது. வீட்டுச் சூழல், உணர்ச்சிப் பெருக்கத்தை தரக்கூடியதாக அமையின் அது ஒரு மாணவனது

முறிவைத் தருகின்றன. ஒரு பிள்ளை தான் வீட்டிலே ஒரு சூழ்நிலையிலும், அயலிலே வேறு சூழ்நிலையிலும், பள்ளிக்கூடத்தில் இன்னுமோர் சூழ்நிலையிலும், வெகுவாக மாறுபட்டு வாழ்விலும் இம் மன முறிவு ஏற்படுகின்றது.

தமது குடும்பத்தில் தோன்றியுள்ள பிரச்னைகள் சச்சரவுகள், அல்லது பெற்றோர் ஒரு பிள்ளை மீது அதிக அன்பையும், இன்னொன்றில் மீது வெறுப்பையும் காட்டுவதாலும், மன முறிவு ஏற்படுகின்றது. சில பெற்றோர் ஒரேவிதமான செய்கைக்கு சிலவேளைகளில் பாராட்டுவதும், சிலவேளைகளில் கண்டிப்பதும், பிள்ளைக்கு மனப் போராட்டத்தைக் கொடுக்கின்றது.

### பாடசாலையில்

வகுப்பிலே பின்தங்கிய பிள்ளைகள், முன்னேற்றமான பிள்ளையை காரணமின்றியோ, அல்லது வேறெதுவும் காரணம் காட்டியோ, அடக்க முற்படல் தமது மனமுறிவைச் சீராக்கும்போது தம்மிடம் உள்ளனவே சிறந்தன எனவும், மற்றையவை குறைந்தவை எனவும் கூறல் ஆகியன சில உதாரணங்களாகும்.

இதன்காரணமாகப் பிற்காலத்திலும் வளர்ந்தபோதும் படியாதவன், தன்னிலும் பார்க்க நன்றாகப் படித்தவன் செய்பவற்றை குறை கூறித் தனது செய்கையைப் பலப்படுத்திக்கொள்கின்றான். பணத்தால்தாழ்ந்தவனும் தன்னிலும் பணம் உள்ளவனை கெட்டவழியில் சேகரித்த பணமென்றோ உண்ணாமல் சேர்த்த பணமென்றோ காரணம் காட்ட முற்படுகின்றான்.

சிறுபிள்ளையாக, பள்ளிப் பராயத்தில் ஏற்பட்ட மனத்தாக்கம், மனமுறிவு முதலியன, வாழ்வின் நிலையான இடத்தைப் பெற்றுவிடுகின்றன.

### பாலுணர்ச்சி காரணமா?

ஒருபிள்ளையினது மன முறிவை வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே களையாதவிடத்து அவனது கல்வியும், பிற்கால வாழ்வும் அபாயகரமான முறையில் பாதிக்கப்படலாம்.

இளம்வயது மாணவ மாணவிகள் கல்வியில் பின்தங்குவதற்கு பாலுணர்ச்சியும் ஒரு காரணமாக அமையும். எமதுநாட்டின் சீதோஷ்ண, சமூக சூழ்நிலையில், 14வயது தொடக்கம் 16 வயதுள்ள ஆண்களும், 11 வயது தொடக்கம் 14 வயதுவரை பெண்களும் பக்குவநிலையை அடைகின்றார்கள். இவ்வயதின்பின் உள்ள குமரப்பருவத்தில் கல்வி புகட்டுவது [illegible]

(7-ம் பக்கம் பார்க்க)



பூமண்டலம் தவிர்ந்த ஏனைய கிரகங்களைப் பற்றி கண்டறிவதற்கு மனிதனுக்கு உள்ள ஆவல்தான் என்னே! வானவெளி ஆராய்ச்சியில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மனிதன் வெளிமண்டலத்தில் நடக்குமளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது.

சென்ற மாதம் 5-ந் திகதி அமெரிக்க வானவெளி வீரர் ஈயூன் சேர்னன் 2 மணித்தியாலம் 8 நிமிடங்கள் வெளிமண்டலத்தில் நடந்தபோது எடுக்கப்பட்ட படத்தை இங்கே காண்கிறீர்கள். நடக்கும்போது தான் பயணம் செய்த வானவெளிக்கப்பலுடன் 'உயிர்நாடி' (Life Line) மூலம் அவர் தொடர்புகொண்டிருந்தார்.

# கூ. மொ. வி. நிர்வாகத்தை பிரித்துப் பரவலாக்கவேண்டும்

— எஸ். கே. ரி. —

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் நிர்வாகத்தைப் பரவலாக்குவதால் அது மக்களுக்கு நன்மையளிப்பதுடன் அரசாங்கத்துக்கும் லாபத்தைக் கொடுக்குமென்பதைக்கட்டுரையாசிரியர் தக்க ஆதாரங்களுடன் இங்கு விபரிக்கிறார்.

தற்பொழுது பெருகிவரும் பொது மக்களின் தேவைகளை யொட்டி கூ. மொ. வி ஸ்தாபனத்தைப் பரவலான முறையில் அமைத்தால் அதனால் போதிய நன்மை ஏற்பட இடமுண்டு. மேலும் கூ. மொ. வி. ஸ்தாபனத்தின்பல பிரச்னைகளைத் தீர்க்கவும் இதுவே சிறந்த வழியாகும்.

பரவலாக கூ. மொ. வி. ஸ்தாபனங்களை அமைப்பதால் ஜனநாயக அடிப்படையில் அரசாங்கத்தை ஸ்திரப்படுத்தவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் வழிவகை செய்வதாக அமையும் நிர்வாகத்திறமையும் லாபமும் இதனால் அதிகரிக்கும்.

இவற்றிற்கும் மேலாக வாழ்க்கைச்செலவைக்குறைக்கவும் அந்நிய செலாவணியைச் சேமிக்கவும் இத்திட்டம் உதவும். பாவனையாளர்களின் தேவைக்கேற்ற பொருட்களை விநியோகம் செய்யவும் அத்தியாவசியமான பொருட்களை வேண்

வரின் கையிலேயே குவிந்து இருக்கின்றன. இதனால்இச் சபையின் மற்றைய அங்கத்தவர்கள் அதிகாரம் அற்றவர்களாயிருக்கின்றார்கள்.

தலைவரின் அதிகாரத்தின் காரணமாக அவர் ஒரு பிழையான முடிவைச் செய்தால் அதற்காகநாடு கஷ்டப்படுவதுடன் இந்த முடிவின் காரணமாக அரசாங்கமும் குற்றஞ்சாட்டப் படுகின்றது.

கடந்த கால அனுபவத்தைக் கொண்டு கூ.மொ.வி. ஸ்தாபனம் தனது கடமையைச் செவ்வனே செய்துவிட்டதென்று எவரும் கூறிவிட முடியாது.

### அரசாங்கம் கவனிக்குமா ?

கூ. மொ. வி. ஸ்தாபனத்தை நாம் சிறந்த முறையிலும் பொதுமக்களுக்குச் சேவை செய்யக்கூடிய வகையிலும் செயற்படுத்தவிரும்பினால் அரசாங்கம் அதனை கொழும்பு, திருக்கோணமலை கண்டி, யாழ்ப்பாணம், காலி பதுளை அனுராதபுரம் போன்ற இடங்களில் பரவ

கப்பட்ட இடங்களில் நிர்வாகத்தை நடாத்த ஒரு சபையும் அவ்விடத்திலேயே யுள்ள ஒருவரும் அச்சபைக்கு தலைவராகத்தெரிவு செய்யப்படல் வேண்டும். மேலும் நிர்வாகப் பொறுப்பாளர்களாக ஒரு பொது மனேஜரும், கணக்காளரும், பொருட்களை விநியோகிக்க ஒரு உத்தியோகஸ்தரும் பொருட்களை கொள்வனவுக்கொருவரும் நியமிக்கப்படலாம்.

பரவலாக ஸ்தாபிக்கப்பட்டநிலையத்தில் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் அந் நிலையத்தின் தேவைக் கேற்றவாறும் மற்றப் பிரிவுகளின் தேவைகளை கருத்தில் கொண்டு சுயேச்சையாகவும் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், காரியாதிகாரி, அரசாங்க அதிபரிடம் பதிவு செய்த வியாபாரிகள் மூலமும் பொருட்களை பரவலாக ஸ்தாபிக்கப்பட்ட கூ. மொ. வி. நிலையங்கள் பொருட்களை

டியவர்களுக்கு வழங்கவும் இம்முறை வசதியளிக்கும்.

### தலைவருக்கு ஏன் தனி அதிகாரம்

தற்பொழுது கூ. மொ. வி ஸ்தாபனம் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அதிபர்களினாலேயே நடாத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவரினாலேயே சகல நிர்வாகமும் செயற்படுத்தப்படுகின்றது.

இம்முறையின் பிரகாரம் எல்லா அதிகாரங்களும் தலை

லாக முழுப்பொறுப்புடன் இயங்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

### அதிகார சபைகளின் அங்கத்துவம்

இவ்வாறுபரவலாகப்பிரிக்

விநியோகம் செய்யலாம் அரசாங்க அதிபரும் காரியாதிகாரிகளும் இச்சபையின் நிர்வாகிகளாய் இருத்தல் வேண்டும். (வளரும்)

# கண்ணோட்டம்

## விவசாயக் - கைத்தொழில்

இம்மாதம் 8-ந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது சிம்மாசனப் பிரசங்கத்தில் தனியார் துறைக்கு ஊக்கமளிக்கப்படவிருப்பது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் அக்கறையுடையவர்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய செய்தி. ஆனால் சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்ட வசதிகளும், சலுகைகளும் வெறும்

இதனாலே இத்துறையில் புதுப்புது முயற்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதுநாட்டின் வருங்காலம் ஒளிமயமானதாக இருக்கும் என்பதற்கு அத்திவாரமிடுவதாயுள்ளது.

நமது நாட்டின் கைத்தொழில் துறையை இருவகைப்படுத்தி நோக்கலாம். நாம் விவசாயத்துறையில் இன்னும் முன்னேற்றமடைந்துவிடவில்லை. விவசாயத்துறை அபிவிருத்திசெய்வதற்கு நவீன விஞ்ஞான சாதனங்களைப் பயன்படுத்தவேண்

### கைத்தொழில் அரங்கு

காகிதத்திலான வாக்குறுதியாக இல்லாமல் நடைமுறையில் செயல்பட்டால் மட்டுமே அதன்பயனைப் பூரணமாக உணரவும், அனுபவிக்கவும் முடியும்.

- ம. வ. கா -

ஒரு நாட்டின் பொருளாதாரநிலை விருத்தியடைவதற்குத்தனியார்துறையினரின் பங்கு பெருமளவில் உண்டு. எந்தவொரு நாட்டில் தனியார்துறை வர்த்தகம், தனியார்துறை கைத்தொழில் ஆகியவற்றுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கப்படுகிறதோ அப்பொழுதுதான் அந்த நாடு பொருளாதாரத் துறையில் சுமுகமாக முன்னேறமுடியும்.

நமது நாட்டில், கைத்தொழில் அபிவிருத்தியின் அவசியம் இப்பொழுது உணரப்பட்டுவருகிறது.

டும். இதற்கான உபகரணங்களை நமது நாட்டில் தயாரிக்கும் கைத்தொழில்துறை ஒன்று; மற்றும் பொதுமக்களின் பாவனைப்பொருட்களை தயாரிக்கும் கைத்தொழில் துறை ஒன்று.

குறிப்பிட்ட இரு கைத்தொழில் துறைகளிலும் நமது நாடு முன்னேற்றமடையவேண்டுமெனினும் முன்னையது முதன்மைவாய்ந்ததாகும். ஆனால் விவசாய உபகரணங்களை பிறவுண்ஸ் ஸ்தாபனத்தார் போன்ற ஒரு சில ஸ்தாபனங்களே தயாரித்துவருகின்றன. இலங்கையில் இப்பொழுது இரண்டாவது வகையைச் சார்ந்த கைத்தொழில் துறையே சிறிது முன்னேற்றமடைந்துவருகிறது.

விவசாய முன்னேற்றத்துக்கு உதவக்கூடிய கைத்தொழில் துறையை வளர்ப்பதற்கு நமது கைத்தொழில்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பகுதி

## சோழன் இல்லம் முதலிடம்
### பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு ''மாணவர்களது இளமைக் காலம் மிகவும் பொன்னானது இளமைக் காலத்தில் அறிவையூட்டும் கல்வியைப் பெறுவதுடன் தேகத்தை வளர்க்கும் தேகப்பியாசப் போட்டிகளையும் கற்கவேண்டும். அப்போதுதான் அவன் மிகவும் சிறப்பு மிக்கவனாக வாழ முடியும்'' என்று பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டார்,

மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டிகளில் சோழன் இல்லம் 223 புள்ளிகளைப்பெற்று முதலாவது இடத்தையும், சேரன் இல்லம் 221 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தையும், பாண்டியன் இல்லம் 204 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் அடைந்தன. போட்டியின் சிலமுடிவுகள் வருமாறு;

100 யார் ஓட்டம் (மே. பி.) பெண்கள்- பி. சற்குணநாயகி, ஆர். சிவயோகமலர். எம். மனோன்மணி (ம. பி.) பெண்கள்- எம். குலமணி, எம். கனகமணி எம். திலகவதி. (கீ. பி.) பெண்கள்- எம். நவமலர், ஏ. நாகரத்தினம், எஸ். பூமணி.

தடையோட்டம் (ஆ. பி,) பெண்கள்- எஸ். சரஸ்வதி, கே. புவனேஸ்வரி, எம். மனோன்மணி.

220 யார் ஓட்டம் (மே, பி.) ஆண்கள்- பி. கனககுலசிங்கம், என். பேரின்பநாயகம், எம். இராஜரத்னம். (ம. பி.) ஏ. அலோசியஸ், எம். அங்கமுத்து, எம் பாரதிநாதன்.

75 யார் ஓட்டம் (ஆ. பி.) பெண்கள்- எஸ். சரஸ்வதி. கே. புவனேஸ்வரி, எம். சிவகுணவதி.

50 யார் ஓட்டம் (அதி ஆ. பி.) பி. பாரதி, பி சற்குணம், எஸ் சதானந்தன்.

220 யார் ஓட்டம் (மே. பி.) பெண்கள்- பி சற்குணநாயகி, ஏ சிவயோகமலர், ஏ சரஸ்வதி. (ம பி) எம். குலமணி, ஜே திலகவதி, ரி தனராணி.

கயிறடித்தல் (மே பி) பெண்கள்- ஏ சிவயோகமலர், ஏ. சரஸ்வதி, எம். மனோன்மணி. (ம பி) பி. கௌசலாதேவி, கே. புஷ்பராணி. எஸ், புஷ்பராணி.

100 யார் ஓட்டம் (மே பி) ஆண்கள்- என் பேரின்பநாயகம், பி கனககுலசிங்கம், எம். இராஜரத்னம். (ம பி) ஏ. அலோசியஸ், எம் அங்கமுத்து, பாக்கியநாதன். (கீ பி) எம் நிற்குணம், ரி விமலச்சந்திரன், ரி கணேசானந்தன்.

தடையோட்டம் (ம பி) ஆண்கள்- பி கனகரத்தினம், ஜி. சங்கரசிவம், எஸ் கந்தராசா.

## பாரதி இல்லம் வெற்றி
### புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய போட்டிகள்

புதுக்குடியிருப்பு, திங்கள் அண்மையில் நடைபெற்ற புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

முதலாம் இடம்: பாரதி இல்லம் பச்சை 253 புள்ளிகள்.

இரண்டாம் இடம்: திருவள்ளுவர் இல்லம் 204 புள்ளிகள்.

மூன்றும் இடம்: கம்பர் இல்லம் 163 புள்ளிகள்.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் கு. வி செல்வத்துரை தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக வவனியா எம் பி திருதா சிவசிதம்பரம் கலந்துகொண்டார். திருமதி தா சிவசிதம்பரம் பரிசுகள் வழங்கினார்

1500 மீற்றர் ஓட்டம் அ. மகேந்திரராசா. க சிவபாலன், ச. விசயரத்தினம்.

உயரம் பாய்தல் மேற்பிரிவு: க சிவபாலன், அ. மகேந்திரராசா, பெ பேரின்பநாயகம்.

சாம்பியன்கள்

மேற்பிரிவு க. சிவபாலன் மத்தியபிரிவு: மு தர்மலிங்கம், கீழ்ப்பிரிவு: யோ. யோகராசா.

பெண்களின் 400 மீற்றர் ஓட்டம்: கிறிஸ்தீன் மகேஸ்வரி, ந இந்திராணி.

## ''பிள்ளைகளின் கல்வி அவசியத்தை பெற்றோர் உணரவேண்டும்!''
### — கிளிநொச்சி எம். பி.

கிளிநொச்சி, திங்கள் நமது பிள்ளைகளுக்குக் கல்வி போதிப்பது மிகவும் அவசியமென்பதைப் பெற்றோர்கள் உணரவேண்டும். என்று கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரிய சங்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கிளிநொச்சித் தொகுதியைப் பொறுத்தமட்டில் மாணவர்களுக்குக் கல்வி வாய்ப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. கல்வியமைச்சு இத்தொகுதிக் கல்வி வாய்ப்பில் அக்கறையில்லாமலே இருந்துவருகிறது.

எனினும் இப்பகுதியின் இப்போதுள்ள கல்வி வாய்ப்புகளைத்தானும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பயன்படுத்தாமல் இருந்து வருகிறார்கள். இது மிகவும் கவலையளிக்கிறது.

கிளிநொச்சி முன்னாள் எம். பி. திரு. அ. சிவசுந்தரம் பேசுகையில் இப்பாடசாலை ஆசிரியர்களின் ஒற்றுமையின்மையாலும், அசிரத்தையினாலும் மாணவர்களின் கல்விநிலை பெரிதும் மோசமாகிக்கொண்டேபோகிறதென்றும் எனவே ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒத்துழைத்து பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கு உதவவேண்டும் என்றும் கூறினார்.

மற்றும் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. த. அழகரத்தினம், திரு கா. பொ. தம்பிராசா உட்

உரும்பராய்

## இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ் உரும்பராய் இந்துக் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் அர்ச்சுனன் இல்லம் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டிகளில் அர்ச்சுனன் 194 புள்ளிகளும், பீமன் 159 புள்ளிகளும், தர்மன் 131 புள்ளிகளும், நகுலன் 106 புள்ளிகளும் பெற்றுள்ளன.

### சாம்பியன்கள்

இப்போட்டிகளில் சாம்பியன்கள் விபரம் வருமாறு: சிரேஷ்ட பிரிவு- எஸ். சிறிகாந்தன், மத்தியபிரிவு- ரி. மகேஸ்வரன், கனிஷ்டபிரிவு- எஸ். சிறிரங்கநாதன்,

### பெண்கள்

சிரேஷ்ட பிரிவு- எஸ். ஈஸ்வரி, மத்திய பிரிவு- எஸ். அருந்ததி, கனிஷ்ட பிரிவு- எஸ். கமலாதேவி.

கோப்பாய் எம். பி.யின் பாரியார் திருமதி பி. கதிரவேற்பிள்ளை பரிசில்களை வழங்கினார்,

## காலபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ் பாஷையூர் அர்ச். அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ''ஏ'' பிரிவுக்கான உள்ளூர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இதுவரை நடைபெற்ற முதல் நாலு ஆட்டங்களின் புள்ளிவிபரம்:

பாடுமீன்: 6 புள்ளிகள்' றேஞசஸ்: 6 புள்ளிகள், சன்றைஸ்: 5 புள்ளிகள், மயிறெற்ஸ்: 5 புள்ளிகள் புரட்சி 1 புள்ளி, செவின் குறேஸ் 1 புள்ளி.

## மாட்டு வண்டிப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டு மாதகல் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற மாட்டுவண்டிப் போட்டி முடிவுகள்:

இரட்டை மாட்டுவண்டிப் போட்டி: எஸ். குணரத்தினம், சு. மன்மதராசா, வி. ஆனந்தராசா.

ஒற்றைத்திருக்கல்போட்டி: வ. கணேசரத்தினம், ந. இரத்தினம், அ இராமலிங்கம்.

## 'விடிவெள்ளி' நினைவுக்கட்டுரைப் போட்டி பரிசளிப்பு

யாழ்ப்பாணம், திங் 'விடிவெள்ளி' நினைவுமன்றம் 'ஈழநாடு' சிறுவர்பூங்காவின் அனுசரணையோடு நடாத்திய விடிவெள்ளிநினைவுக்கட்டுரைப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த செல்வன்கள் த. மனோகரனும், சி. தில்லைநடராஜனும் முறையே முதலாம், இரண்டாம் பரிசுகளையும், உடுப்பிட்டி மகளிர்கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஸ்ரீமீனாட்சி பொன்னம்பலமும், யாழ்ப்பாண மத்தியகல்லூரியைச் சேர்ந்த செல்லன் சி. சுதந்திரராஜாவும் மூன்றும் பரிசிலையும் பெற்றுள்ளனர்.

இம்மாதம் 23ந் தேதி யாழ். நகரமண்டபத்தில் 'நந்தி'யின் புத்தகவெளியீட்டுவிழாவில் இவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

[illegible] வர்.

## உசன் இராமநாதன் வித்தியாலய விளையாட்டுப் போட்டிகள்

எழுதுமட்டுவாள், திங்கள் உசன் இராமநாதன் மகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு வித்தியாலய அதிபர் எம். சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வடமாநிலபெரும்பாக வித்தியாதரிசகர் திரு. வே. நடராசா கலந்துகொண்டார். இப்போட்டியில் வைத்திலிங்கம் இல்லம் 221 புள்ளிகளையும் நாவலர் இல்லம் 217 புள்ளிகளையும் நடேசன் இல்லம் 196 புள்ளிகளையும் பெற்றது. போட்டியின் சில முடிவுகள் வருமாறு:

1500 மீற்றர் மேற்பிரிவு ஆண்கள்: சிவபாலன், கந்தசாமி, சின்னத்துரை.

440 மீட்டர் (மேற்பிரிவு) ஆண்கள்: கிருபானந்தமூர்த்தி, மாசிலாமணி, கருணாநாதன்,

மத்தியபிரிவு; பாலசிங்கம், சிவப்பிரகாசம், ஜீவரத்தினம்.

220 மீட்டர் (மேற்பிரிவு) கிருபானந்தமூர்த்தி, குணரத்தினம், சிவராசா. (மத்திய பிரிவு) பாலசிங்கம், சிவப்பிரகாரம், அளகரட்னம்.

பெண்கள்: (மேற்பிரிவு) யோகாம்பிகை, செல்வராணி. ஞானேஸ்வரி.

100 மீட்டர் (மேற்பிரிவு) ஆண்கள்: குணரத்தினம், சிவராசா, இராசையா.

(மத்தியபிரிவு) சீவரத்தினம், அளகரத்தினம். துரைராஜா. (மேற்பிரிவு) பெண்கள்: யோகாம்பிகை, செல்வராணி, பரமேஸ்வரி. (மத்தியபிரிவு) நல்லம்மா, பரமேஸ்வரி, விமலேஸ்வரி, 75 மீட்டர் (மத்திய பிரிவு) பெண்கள்: விமலேஸ்வரி, பரமேஸ்வரி, நல்லம்மா. பருதிவட்டம் எறிதல் (மேற்பிரிவு) சிங்கராசா, பாலச்சந்திரன், பரமசிவம். (குண்டெறிதல்) கிருபானந்தமூர்த்தி, சிவபாலன், பாலச்சந்திரன்.

அணிவகுப்பு; நாவலர் இல்லம் முதல் இடத்தையும், வைத்தியலிங்கம் இல்லம் இரண்டாவது இடத்தையும் நடேசன் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றது.

இவ்வாண்டு சாம்பியன்கள்: ஆண்கள் (கீழ்ப்பிரிவு) சிவானந்தன், (மத்திய பிரிவு) பாலசிங்கம், (மேற்பிரிவு) கிருபானந்தமூர்த்தி. பெண்கள்: குலராணி, (மத்தியபிரிவு) பரமேஸ்வரி, (மேற்பிரிவு) யோகாம்பிகை.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி இரகுபதி நவரட்னம் பரிசில்களை வழங்கினார்.

## 'நெற்காணி வழங்குக' எம். பி. கோரிக்கை

கிளிநொச்சி, திங்கள் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற விவசாய இணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு கா. பொ. இரத்தினம் தருமபுரம் குடியேற்றபட்ட மக்களுக்கு நெற்காணி இதுவரை கொடுக்கப்படாததைவிட்டுக் குறைகூறிக் காணி கொடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். காணி விரைவில் கொடுப்பதென முடிவுசெய்யப்பபட்டது.

வட்டக்கச்சி, இராமநாதபுரம், முரசுமோட்டையிலுள்ள குடியேற்றவாசிகளுக்கு பாகுபாடின்றி ஒடு கொடுக்கவேண்டுமென்றும் புயலினால் சேதமடைந்த வீட்டுக்காரர்களுக்கு வழங்கப்பட்ட பணம் போதாதென்றும், இதனை புனராலோசனை செய்யவேண்டுமென்றும் திரு. இரத்தினம் கேட்டுக்கொண்டார். பூநகரியில் கடலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கிளிநொச்சியில் வான்பயிர் சேதமடைந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

## குடிதண்ணீர் பிரச்னை

அனலைதீவு, திங்கள் குடிதண்ணீர்ப் பற்றாக் குறையால் அனலைதீவு மக்கள் பெரிதும் இன்னலுறுகின்றனர். அனலைதீவு வாலிபர் இயக்கத்தினர் இவ்விஷயம் குறித்து உரிய பகுதியினருடன் தொடர்புகொண்டனர். இதன் விளைவாக இம்மாதம் 22ந் தேதி நடைபெறவிருக்கும் யாழ். மாவட்ட இணைப்புக் கூட்டத்தில் அனலைதீவு குழாய் நீர்த் திட்டம்பற்றிப் பரிசிலனைசெய்யப்படுமென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## மாணவர் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குமரப் பருவம் என்று சொல்லப்படுகின்ற, இப்பருவத்தில் அனேகமாக எல்லாப்பிள்ளைகளும் ஒரு சந்தர்ப்பத்திலோ அல்லது பல சந்தர்ப்பத்திலோ, பாலுணர்ச்சியால் உந்தப்படுகின்றார்கள். இந்நிலையிலேயே, குழு ஊக்கம், முதன்மை ஊக்கம், மேன்மை ஊக்கம் முதலியவ தலைதூக்குகின்றன. தன்னோடுஉள்ள ஆள் அல்லது தான் காணும், பேசும் எதிர்பாலாரைக் கவருவதற்காக கோஷ்டிகளின் தலைவராகவும், விளையாட்டுப் போட்டிகளில் முதன்மைஸ்தானங்களிலும், பள்ளிக் கூடச்சங்கங்களில் தலைவர்களாகவும் வர முற்படுகிறார்கள். இதனால் சிலவேளைகளில் படிப்பின்மேலுள்ள கவனம் குறையஏதுவாகின்றது. இந்நிலையிலும் அவர்களது கல்வி பாதிக்கப்படலாம்.

இவர்களது முதன்மைஊக்கம், குழுஊக்கம் ஆகியவற்றைபடிப்பிலேயேசெலுத்தக் கூடியதாக வழிவகுக்க வேண்டியது ஆசிரியரின்தலையாய கடமையாகும். இவை போன்ற காரணங்களுக்கு தகுந்த நிவர்த்தி தேடப்படின் ஒரு மாணவனது அல்லது ஒரு மாணவியினது கல்வி சிறந்த முறையில் செயல்படுமென்பது திண்ணம்.

## விவசாயக் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர்கள் முன்வரவேண்டும். அவ்விதம் செய்வதால் அவர்கள் கைத் தொழிலை மட்டுமல்லாது விவசாயத்தையும் அபிவிருத்தி செய்பவர்களாவர்.

விவசாயத்தை அபிவிருத்திசெய்யவேண்டும் என்று ஆசைப்படும் அரசாங்கம் விவசாய உபகரணங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் துறையை வளர்க்க அத்துறைக்கு ஊக்கமளிக்கவேண்டும்.

விவசாயத்துக்குப் பயன்படும் நவீன சாதனங்களைத் தயாரிக்க உள்நாட்டில் போதுமான மூலப்பொருட்கள் கிடைப்பது அரிது. எனவே இதற்கான மூலப்பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவும் மற்றும் இயந்திர சாதனங்களை வருவிக்கவும் வெளிநாட்டுச் செலாவணியை அரசாங்கம் அனுமதிக்கவேண்டும். மற்றும் வேண்டிய சலுகைகளையும் இத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு அரசாங்கம்அளிக்குமாயின் இக்கைத்தொழில் துறையிலும் அதன் மூலம் விவசாயத்துறையிலும் ஒரு நல்ல எதிர்காலம் பிறக்க ஏதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி கொலைமுயற்சிவழக்கில் எதிரிக்கு மூன்றுவருட கடூழியம்

யாழ்ப்பாணம், செவ். கிளிநொச்சி கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 3 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு நேற்றுக் காலை வட பகுதி அசைஸ் நீதி மன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 65-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி கிளிநொச்சியில் சபாரத்தினம் பெண் இராசம் மாவை சின்னத்தம்பி இராசையா என்பவர் வெட்டிக் கொலை செய்ய முயற்சித்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ரீ. கணேசலிங்கம்' புறக்டர் தளையசிங்கம் லோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானூர்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும், "சடுதியாக ஆத்திர மூட்டியதன் காரணமாக காயம் விளைவித்தேன்" என்று எதிரி தெரிவித்தார்.

வடபகுதி அசைஸ் விசாரணை மீண்டும் இன்று காலை 9-15 மணிக்கு ஆரம்பமாகும்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை தமிழ்ச்சங்க ஆண்டு விழாவின்போது எடுத்தஒரு புகைப்படம் இதில் வெளியாகியுள்ளது. மகாமகோ பாத்தியாயர் உ. வே. சுவாமிநாதய்யர்வாள் உள்ளிட்டு பல அறிஞர்கள் அதில் உள்ளனர். கி. வா. ஜ. அவர்கள் தலையிலே ஒரு குல்லாயுடன் தம் குருவுக்குப் பின்புறமாக நிற்கிறூர். 37 வருடங்களுக்குமுன் எடுத்துள்ள இப்படம் மிக விசேஷமானது.

ஈழத்திலிருந்து பல அன்பர்கள் இம்மணிவிழாவுக்காக சென்னை சென்றுள்ளனர். அகில இலங்கை காந்தி சேவா சங்கக் காரியதரிசி அன்பர் வேலாயுதபிள்ளை சென்னையிலிருந்து எழுதியுள்ள ஒருகடிதத்தில் எழுதுவதாவது:- சென்னை பாலர் அரங்கில் தெ. பொ. மீ. அவர்களின் தலைமையில் காலையிலே நடந்த கவிஅரங்கில் பல கவிஞர்களும் கேட்போர்கள் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைத்தார்கள். புகழ்பாடினூர்கள். பாமாலை சூட்டினர். கி. வா. ஜ. எழுதிய புத்தகக்காட்சி சிறப்பாக அமைந்தது.

"மாலையில் முதல்அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் மணிவிழா நடந்தது. கி. வா. ஜ. வுக்கு புகழ்மாரி, மலர்மாரி, நிதிமாரி பொழிந்தன. இதை அவர் ஒருவரால் எப்படித் தாங்க முடியும்? பக்கத்தில் அவரது அருமைப் பத்தினியார் அமர்ந்திருந்து இம் மாரிகளைத் தாங்கி உதவினூர்கள்..."

ஒரு தமிழ் எழுத்தாளருக்கு, பேச்சாளருக்கு, பத்திரிகை ஆசிரியருக்கு, சமயத் தொண்டருக்கு தமிழகம் நன்றியுடன் செய்யும் மரியாதையைக் கேட்கக் கேட்க நமக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமுள்ளதல்லவா?

ஃ ஃ ஃ

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட திருநீறுஞ் சாதனமுங்கண்டாலுள்கிவராதேயவரவரைக் கண்ட போது உகந்தடிமைத்திறம் நினைந்தங்கு வந்து நோக்கி, இவர் தேவர் அவர் தேவரென்று சொல்லி இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே.

— அப்பர் சுவாமிகள்.

## நிர்வாகக் காரியதரிசி தேவை

இணுவில் ப. நோ. கூ. சங்கத்திற்கு நிர்வாகக் காரியதரிசி ஒருவர் தேவை. தகமை G. C. E. ஆங்கிலமுட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்தவரும், கூட்டுறவுப் பயிற்சி (4 மாதம்) யுடையவரும் வயது 25-க்கு மேற்படாதவர்களும் 30—7—66—க்கு முன் பதிவுத் தபால் மூலம் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கலாம். பிணை; ரொக்கம் 1000/- ஆதனம் 2500 சம்பளம் ரூபா 150/- தொடக்கம் ரூபா 400/- வரை தகுதிக்கேற்பக் கொடுக்கப்படும்

வே. நல்லதம்பி
கௌரவ காரியதரிசி,
இணுவில்
17-7-66.

674

## பாகிஸ்தானின் சீன ஸ்தானிகர்

பீகிங், ஜூலை 18

பாகிஸ்தானின் புதிய ஸ்தானிகராக இங்கு நியமிக்கப்பட்டிருக்கும் திரு. சுல்தான் மொகமட்கான் நேற்று சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினூர். (பி டி ஐ)

## மக்கள்:..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் நாகநாதன் பேசியபோது பின்வருமாறு குறிப்பிட்டார்:— மாவட்ட சபைகள் உருவாகியவுடன் நிர்வாக அதிகாரங்கள்பிரிக்கப்பட்டுவிடும். மக்களுக்கு அதிகபொறுப்புகள் கொடுக்கப்படும் அத்துடன் அவர்களின் குடியியல் அறிவும்அதிகரிக்கும்.

சில அங்கத்தவர்களும்— மந்திரிகளும் மாவட்டசபைகள் ஏற்படுவதை எதிர்க்கிறூர்கள். ஏனென்றுல் அவர்கள் தம் அதிகாரங்கள் பலவற்றை இழந்துவிடுவார்கள். அந்த அதிகாரங்கள் எல்லாப் மக்களின் கைகளுக்குப்போய்விடும்.

டாக்டர் நாகநாதன் மேலும் பேசியபோது, மாவட்டசபைகளை நிறுவுவதற்கான தீவிரமான நடவடிக்கையெடுத்து வருவதற்காக அரசாங்கத்துக்குநன்றிதெரிவித்தார். தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதில்தீவிரமாகஇருக்கும் பிரதமமந்திரிக்கும் அவரது சகாக்களுக்கும் அவர்நன்றிகூறிஞர்.

திருவாளர்கள் பிரின்ஸ் குணசேகர, ரி.பி.தென்னக்கூன், டி. ஆட்டப்பத்து, எஸ். டி. பண்டாரநாயகா ஆகியோரும் பேசினூர்கள்.

## இ. போ. ச. ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதி மார்க்கமாக அரியாலை திருப்பியதன் நோக்கம் என்ன? இ. போ. ச. இனியாவது உணர்ந்து திருத்திக் கொள்ளவேண்டும்.

செ. பாலசுந்தரம்.
அரியாலை.

# உயர்கல்விக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட்டமசோதாவில் குறிப்பிடப்படாவிட்டாலும், தாம் நியமிக்கும் அனைவரையும் நீக்கவும் கல்வி அமைச்சருக்கு அதிகாரம் இருக்கும்.

### அமைச்சரே பொறுப்பு

உயர் கல்விக்கான கட்டுப்பாடு பொதுநிர்வாகம்ஆகியவைகளுக்கு இந்த மசோதாவின்படி கல்வி அமைச்சரே பொறுப்பாக இருப்பார். உயர்கல்விக்கான தனது பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு, தேசியசபைக்கு கல்வி அமைச்சர் தமது பொதுவான உத்தரவுகளை விதிப்பார். இந்த உத்தரவுகளுக்கிணங்க தேசியசபை செயலாற்றவேண்டும், விசேஷ உத்தரவுகள் பிறப்பிக்க அதிகாரம் வழங்குவதென முன்னர் நகல் மசோதாவில் குறிப்பிடப் பட்டிருந்தது. இப்பொழுதுஅதுபொது உத்தரவுகள்என மாற்றப்பட்டுள்ளது.

உயர்கல்விக்கான எந்த ஸ்தாபனம்பற்றியும் ஆராய்ந்து தேசியசபைக்கு அறிவிக்கும்படி கல்வி அமைச்சர் உத்தரவிடவும் மசோதா அதிகாரமளிக்கிறது.

### கல்வி அமைச்சர் நியமிப்பார்

தேசியசபை ஒருதலைவரையும் எட்டு அங்கத்தவர்களையும் கொண்டதாக இருக்கும். இவர்கள் யாவரும் கல்வி அமைச்சரிஞல் நியமிக்கப்படுவர். வாழ்க்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களிலிருந்தும், சர்வகலாசாலை உப அத்தியட்சகர்களாகப்பதவி வகிப்பவர்களிலிருந்தும் தேசிய சபையின் அங்கத்தவர்கள் நியமிக்கப் படுவர். கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியும் நியமிக்கப்படுவர். இந்த அங்கத்தவர்கள்ஐந்துவருடகாலத்துக்கு பதவியிலிருப்பர். மூன்றுஉபஅத்தியட்சகர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை இருக்கமாட்டாது, சர்வகலாசாலைகளில் கல்வியின் தரத்தைப் பேணுவது, செலவினக் கட்டுப்பாடு. உயர்கல்வி ஸ்தாபனங்களின் நிர்வாகம் ஆகியவையாவும் தேசியசபையிடம்இருக்கும். தேசியசபையின்தலைவர்முழுநேர ஊழியராக இருப்பார். நிதியமைச்சருடன் கலந்தாலோசனை செய்யப்பட்டபின் அவருக்குவழங்கப்படவேண்டிய ஊதியம்பற்றித் தீர்மானிக்கப்படும். சபையின் இதர அங்கத்தவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படும்.

ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒவ்வொரு வருடத்திலும் எவ்வளவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது;

ஒவ்வொரு வருடத்திலும் யார்யாரைச் சேர்த்துக் கொள்வது என்பது பற்றி முடிவுசெய்யும் அதிகாரம் தேசியசபையிடம் இருக்கும். ஒவ்வொரு பிரிவிலும்சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை பற்றித் தீர்மானிக்கும் அதிகாரமும் இந்த தேசிய சபையிடம் இருக்கும். போதனுமுறை ஒழுங்குகள்பற்றி தீர்மானிக்கும் அதிகாரம் பாடபோதனைக்கான கட்டணங்கள், வசிப்பிடங்கள், பரீட்சைகள், உயர்கல்விக்கான உதவிப்பணம் கொடுப்பது ஆகியவை பற்றியெல்லாம் தீர்மானிக்கும் அதிகாரமும் பரீட்சைகளை நடத்தும் பொது அதிகாரமும் இந்த தேசியசபையிடம் இருக்கும்.

ஒவ்வொரு நிதி வருடம் முடிவடைந்தபின் ஆறுமாதத்துக்குள் தேசியசபை மந்திரிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு, டிப்ளோமாபடிப்பு ... நல்ல தரத்தை ... அதை நிலைபெறச் செய்வது ஆகிய விஷயங்களில் நிர்ணயம் செய்வதிலும் தேசிய சபைக்கு அதிகாரம் இருக்கும்.

உயர்கல்வி நிலையம் (பல்கலைக்கழகம் அல்லது கனிஷ்ட பல்கலைக்கழகம்) ஸ்தாபிப்பது இவற்றுக்குபெயர் இடுவது, இடம் நிர்ணயிப்பது ஆகிய விஷயங்களில் முடிவு செய்யும் அதிகாரம் கல்வி மந்திரியிடம் இருக்கும். எனினும் பார்லிமெண்டின் இரு சபைகளாலும் அங்கீகரிக்கப்பட்டாலன்றி இவை பல்கலைக்கழகங்களாகப் பிரகடனப்படுத்தப்படமாட்டாது.

### இன, மத பாகுபாடு இருக்கமாட்டாது

இந்த பல்கலைக்கழகங்களில் இன, மத பாகுபாடுகள் இருக்கமாட்டாது. சகலருக்கும் பல்கலைக்கழகத்தில் இடமிருக்கும். இவைகளில் அனுமதிக்கப்படும் ஆசிரியர்கள் மாணவர்கள் விஷயத்தில் மதத்தலையீடு இருக்காது. இந்தப்பல்கலைக்கழகங்களில் மதபோதனை இருக்கக் கூடும்.

### உபவேந்தர் நியமனம்

தேசியசபையால் சிபார்சு செய்யப்படும்மூன்று பேர்களிலிருந்து ஒருவரை உபவேந்தராக மந்திரி நியமிப்பார். இவருடைய பதவிக்காலம் ஐந்து வருடத்துக்கு அல்லது 65வயதை அவர் அடையும் வரை நீடிக்கும்.

பல்கலைக்கழக போதனுசிரியர்கள் 62 வயதில் ஓய்வு பெறவேண்டியவர்களாவர்.

உபவேந்தர் மீண்டும் அதே பதவி வகிப்பதற்கு தகுதியுடையவராக இருப்பர். பேராசிரியர்களும் போதனுசிரியர்களும் ஒரு அதிகார சபையினுல் நியமிக்கப்படுவர். இந்தசபை தற்போதுள்ள பல்கலைக்கழக சபைக்கு சமமானதாகஇருக்கும். கட்சி சாரபற்ற மாணவர் சபைகள் அமைப்பதற்கும் மசோதா வகைசெய்கிறது. மாணவர்சபை அல்லது வேறுபீடங்களைச்சேர்ந்தசங்கங்கள் பல்கலைக்கழகத்தின் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதாக கருதப்பட்டால் அவை ரத்து செய்யப்படும்.

### பல்கலைக்கழக கல்லூரிகள்

கல்வி டைரக்டர்ஜெனரல் கனிஷ்ட பல்கலைக்கழக கல்லூரிகளின் நிர்வாகத்துக்கு பொறுப்பாகஇருப்பார். இலங்கையின் தேவைக்கேற்ப இந்தக்கல்லூரிகளில் உயர்கல்வி தொழில்நுட்ப வகுப்புகள் நடத்தும் அதிகாரம் கல்விமந்திரியிடம்இருக்கும்.

பல்கலைக்கழகங்களில் சேர்ந்து உயர்கல்விபயிலக்கூடிய வகையில் கனிஷ்ட பல்கலைக்கழகங்களில் பாடபோதனைகள் நடத்தப்படும்.

## டாக்டர் மலலசேகரா

கொழும்பு, திங்.

உயர்தரக் கல்விக்கான உத்தேச தேசிய சபையின் தலைவராக, தற்போது லண்டனில் இலங்கை ஸ்தானிகராகவிருக்கும் டாக்டர் ஜி. பி. மலலசேகர நியமிக்கப்படக்கூடும் என்று கருதப்படுகின்றது.

இந்தசபைமூன்றுபல்கலைக்கழகங்களுக்கும் பொறுப்பாகவிருக்கும், காலஞ் சென்ற திரு. பண்டாரநாயகா பிரதமராக இருந்த போது டாக்டர் மலலசேகரா மாஸ்கோவில் இலங்கை தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் பல்கலைக் கழகத்தில் பாளி விரிவுரையாளராகவும் கீழைத்தேச கல்வி போதனு பீடத்தின் தலைவராகவும் இருந்திருக்கின்றூர்.

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

## புதிய சாதனை

வாஷிங்டன், ஜூலை 18

ஒரு மைல் ஓட்டத்தில் அமெரிக்க வீரர் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜிம்றியோ ஒரு மைல் தூரத்தை 3 நிமிடம் 53.1 விநாடிகளில் கடந்து முடித்துள்ளார். பழைய சாதனையிலும் பார்க்க இது இரண்டு விநாடிகள் குறைவு. பழைய சாதனையை நிலைநாட்டியது பிரெஞ்சு வீரராகும்.

ஜிம்றியோ ஒரு அமெரிக்க மாணவனுகும். இவரது வயது 19.

## இடமாற்றம்

கோண்டாவில், திங்கள்

மன்னூர்பெரும் பகுதிப் பதிவுகாரர் சந்தோமில் கடமையாற்றிய திரு. த. சிதம்பரநாதன் யாழ்ப்பாணம் பெரும்பகுதிப் பதிவுகாரர் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் மன்னூர் இந்து சமய வளர்ச்சிச்சங்க பிரசாரசபைத்தலைவரும், சிறந்த அமெச்சூர் நடிகனுகக ருமாவர்.

## சிரமதானம்

சங்கானை, திங்கள்

சங்கானை இந்து வாலிபர் சங்கத்தினர் சங்கானை சிவன்கோவிலில் திருப்பணி வேலைகளை இம்மாதம் 24ந் தேதி சிரமதானமுறையில் செய்யவிருக்கின்றனர். பண்டிதர் திரு. சி வேலுப்பிள்ளை தலைமையில் இந்த சிரமதானப்பணி நடைபெறும்.

## இன மத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டிருக்கிறூர்கள். இதனுல் தேசிய ஐக்கியம் ஒருபோதும் உருவாக மாட்டாது. எதிர்க்கட்சியினரின்சில திருத்தங்கள் நாட்டை பிளவுபடுத்தும் நோக்கமுடையனவாகவே இருந்தன. நாட்டைப் பிளவுபடுத்தும் விஷயங்களை விடுத்து பொருளாதார விஷயங்கள் குறித்து இவர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்கிறூம் என்று இப்போதுதான் உணர ஆரம்பித்திருக்கிறூர்கள்.

செனட்டர் அமீம் எதிர்க்கட்சியினர் தரப்பில் பேசியபோது. தமிழருக்குள்ளேயே ஒற்றுமையில்லை. தமிழரசுக்கட்சிக்குள்ளேயே ஒற்றுமையில்லை. இந்த நிலைமையில் ஒற்மையைப் பற்றி பேசுகிறூர்கள் என்றூர். தமிழ் பல்கலைக் கழகம் உருவாகி முஸ்காலாசாரத்துக்குஇடமில்லையொனில் முஸ்லிம் பல்கலைக்கழகம் ஒன்று தேவைப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

முஸ்லிம்கள் சிங்களம் படிக்க விரும்புகிறூர்கள் ஆனுல் அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவில்லை. என்று கூறிய செனட்டர் அமீம் முஸ்லீம்கள் சிங்களம் படிக்க வேண்டிய வசதிகள் செய்துதரும்படி கேட்டுக் கொண்டார்.

செனட்டர்கள், ரணசிங்க, பியசேன, சிறிவர்தன ஆகியோர்களும் பேசினூர்கள்.

கொழும்பு, திங்கள்

அரசாங்க சேவையைச் சேர்ந்த என்ஜினியர்கள் இன்று நடத்திய கூட்டத்தில் தமது சம்பள உயர்வு, பதவி உயர்வு ஆகியவை சம்பந்தமாக போதிய நடவடிக்கை எடுக்கப் படாததன் காரணமாக தாம் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வதென முடிவு செய்தார்கள். இதற்கான திகதி பற்றிதீர்மானிக்கப்படவில்லை.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org